மூலிகை மணி

வேலூர் மருத்துவர் :- ஆ. இரா. கண்ணப்பர்

மலர் 9] பரிதாபி ஞூ — பங்குனி மீ [இதழ் 5

[158-வது மூலிகை]



'முந்திரி'

விலை 50-காசு

உ
முருகா.

'மூலிகை மணி'

(சித்த மருத்துவ மாத இதழ்)

ஆசிரியரும், அச்சிட்டு வெளியிடுபவரும்

வேலூர் மருத்துவர் ஆ. இரா. கண்ணப்பர், R.M.P.

பொறுப்பாசிரியர் : க. வெங்கடேசன், B. Sc.,

ஆண்டு சந்தா ரூ. 6—00 | தனி இதழ் : 50-காசு

பங்குனி இதழில்

1. மருந்தொன்று கண்டேனம்மா! (பாட்டு) ... 1
2. செய்திப் படம் ... 2
3. திரு நெ. து சு. அவர்கட்கு வேண்டுகோள் ... 3
4. கேள்விக்கென்ன பதில்? ... 8
5. நம் நாட்டு மூலிகைகள் ... 9
6. சித்தர் இலகு மருத்துவம் ... 14
7. அனுபவம் உணர்த்தும் உண்மை ... 15
8. இதய ஒலி ... 16
9. நோயும்-மருந்தும் (கேள்வி-பதில்) ... 17
10. நம் நாட்டுச் சித்தர்கள் ... 25
11. கஞ்சா ஓர் நஞ்சு ... 26
12. The Fundamental Principles of Kalpa ... 31
13. நோய்களின் பெயர் அகராதி ... 33
14. சர்க்கரை நோய் தீர ஆவாரை சுவைநீர் ... 36
15. ஆஸ்துமாவை அகற்றுங்கள் ... 39
16. மூலிகை அகராதி ... 44
17. காய்ச்சல், முறைக்காய்ச்சல், சன்னிக்காய்ச்சல் ... 46
18. மது+மனிதன்=மிருகம் ... 49
19. அமைச்சரின் அழகான அறிவிப்புகள் ... 56

தொலைபேசி எண் : 726. | த. பெ. எண் : 126

59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1 (வ. ஆ.)

மூலிகை மணியில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள் அனைத்தும் மூலிகை மணி பதிப்பகத்திற்கே உரிமை உடையது. கட்டுரைகள், கவிதைகள் அனைத்திற்கும் எழுதிய ஆசிரியர்களே பொறுப்பு.

உ
முருகா.

மூலிகை மணியின் சார்பாக
திருத்தணிகையில் ஆண்டு தோறும் நடைபெறும்
சித்திரை முழுநிலவுப் பெருவிழாவின்
13-வது ஆண்டு விழா அழைப்பிதழ்.

★

அருளுடைப் பெரியீர், வணக்கம், வாழி!

மூலிகை மணியின் சார்பாக, ஆண்டு தோறும் நடைபெற்று வரும் 'சித்திரை முழுநிலவுப் பெருவிழா' இவ்வாண்டு சித்திரைத் திங்கள், 4,5-நாட்களில். (16, 17—4—73) ஆகிய இரு நாட்களில், பின் கண்ட நிரலின்படி சிறப்பாக நடக்க இருக்கின்றது.

இவ் விழா நடத்தலின் நோக்கம்:—

- மக்கள் நோயற்று வாழ்தல் வேண்டும்.
- வந்த நோய், சொந்த நாட்டு மருத்துவத்தால் சிக்கல் இன்றி தீர வேண்டும்.
- தமிழ் மருத்துவம் தழைத்துச் செழிக்க வேண்டும்.
- நாடெங்கும் மூலிகைகள் வளமாக வளர வேண்டும்.

என்று தணிகை வள்ளலிடம், மூலிகை மணி வாசகர்களுடன், ஆசிரியர் குடும்பத்துடன் சேர்ந்து, 'கூட்டு வழிபாடு' நடத்துதற்கே ஆகும்.

மூலிகை மணி வாசகர்கள் தம் குடும்பத்துடன் தாராளமாக வந்து இக் 'கூட்டு வழிபாட்டில்' கலந்து கொண்டு தமது வேண்டுதல்களை, தணிகை முருகனிடம் சமர்ப்பிக்கலாம். வருகின்ற அன்பர்கள், இரண்டு நாட்கள் தங்கவும், உணவு வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாசக அன்பர்கள் திரளாக வந்து இவ் விழாவில் கலந்து மேன்மையுற வேண்டுகிறேன்.

இன்னணம்,

வேலூர் டாக்டர், ஆ. இரா. கண்ணப்பர், R.M.P.

ஆசிரியர், மூலிகை மணி.

நிகழ்ச்சி நிரல்

தங்கும் இடம் :

திருத்தணிகை வேலூர் வணிக வைசியர் சத்திரம்,
திருக்குளத்தின் மேலண்டை பக்கம்,
(தேவஸ்தான அலுவலகத்திற்குப் பக்கத்தில்)

நாள் : 16—4—73 திங்கட்கிழமை

காலை 11—00 மணி இறை வணக்கம்
வேலூர் பாலவிகார் குழந்தைகளின்
பக்திப் பாடல்கள்.

பகல் 12—00 மகேச்வர வழிபாடு
அடியவர்கட்கு விருந்து படைத்தல்.

மாலை 5—30 தணிகை மலைமீது வசந்தமண்டபத்தில்
இசைச் சக்ரவர்த்தி, இசைப் பேரறிஞர்.
மதுரை சோமு அவர்கள் — பாட்டு
ராமநாதபுரம் M. N. கணேச பிள்ளை—வயலின்
தஞ்சை T. P. நாகராஜன்—மிருதங்கம்
மாயவரம் G. சோமு—கஞ்சிரா
திருத்தணிகை, நாகரத்தினம்—முகர்சிங்

நாள் : 17—4—73 செவ்வாய்க்கிழமை

காலை 8—30 மணி
திருத்தணிகைப் பெருமானுக்கு திருமுழுக்கு விழா

பகல் 12—00 அடியவர்களுக்கு விருந்து படைத்தல்

மாலை 6—00 மலை மீது வசந்த மண்டபத்தில்
தமிழக ஆளுநரின் தமிழாசிரியர்,
டாக்டர் சி. பாலசுப்பிரமணியம்,
"முருகனும்—இயற்கையும்"
என்ற பொருளில் உரையாற்றுவார்.

இரவு 8—00
தணிகைப் பெருமான் திருவீதியுலாக் காட்சி
வேலூர் கிளாரினெட் வித்வான்
N. K. இராசகோபால் சகோதரர்களின்
கிளாரினெட் கச்சேரியுடன் விழா நிறைவுறும்.

பி. கு :—திருத்தணிகை, அரக்கோணம் புகைவண்டி சந்திப்பிலிருந்து எட்டு மைல் தொலைவுள்ளது. அரக்கோணம் புகைவண்டி நிலையத்தில் இறங்கி, அங்கிருந்து பேருந்து வழியாக திருத்தணிகை வரலாம்.

உ
முருகா.

மருந்தொன்று கண்டேனம்மா!

பல்லவி

மருந்தொன்று கண்டேனம்மா! — (அரு)
அமிழ்தான தமிழாலே அடியார்கள் துதிசெய்த
(மருந்)

அநுபல்லவி

அழகான பழனியிலே எழிலாக ஆண்டியைப்போல்
அமைந்தானை அருள்தந்து காக்கும் வேல்முருக(ன்)
[னெனும் (மருந்)

சரணம்

வினையெனும் பிணிதீர்ப்பான் வேலவன் எனும்பேரான்
கனியென சுவைகொடுப்பான் கலியெலாம் தீர்த்து
[வைப்பான்
பணிவான குணம் கொடுப்பான் பாரில் நற்புகழ்
[தருவான்
தணிகாசலமெனும் தரணிபுகழ் நாத(ன்)
(மருந்)

★

[திருமதி அமிர்தவல்லி மாணிக்கவாசகம், சென்னை]



செய்திப் படம் :- அண்மையில், சென்னை அண்ணா மருத்துவ மனையில் 'இந்திய மருந்து உற்பத்தி செய்யும் நிலையத்திற்காக' கட்டிடக் கல் நாட்டு விழா நடந்தது. அமைச்சர், அன்பழகர் அடிக்கல் நாட்டினர். முன்னாள் அமைச்சர் மாணிக்கவேலரும், நலத்துறை செயலர் அம்பாசங்கரும், இந்திய மருத்துவத் துறை இயக்குனர், டாக்டர் பு. மு. வேணுகோபால் அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

— **செய்தி 56-ம் பக்கம் பார்க்க.**

ஐந்து கரத்தனை யானை முகத்தனை இந்தினிளம்பிறை போலுமெயிற்றினை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தனை புந்தியில்வைத்தடி போற்றுகின்றேனே.

மூலிகை மணி

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே.— (தாயுமானவர்)

மலர் 9] பரிதாபி ஹூ—பங்குனி மீ மார்ச்-73 [இதழ் 5

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்,

மாண்பமை, நெ. து. சுந்தரவடிவேலு அவர்கட்கு

ஒரு வேண்டுகோள்!

இன உணர்ச்சியும், கூர்ந்த அறிவும், துறை அனுபவமும் ஒன்று சேரும் போது, நல்ல செயல்கள் நடைபெறுவதை யாராலும் தடுக்க இயலாது. சென்னைப் பல்கலைக் கழகத்தில், 25-ஆண்டுகளாக இல்லாது இருந்த நல்ல பல ஆக்க வேலைகள் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக நடைபெற்று வருவதை பலரும் அறிவர். அதிலும் குறிப்பாக, "சென்னைப் பல்கலைக் கழகத்தின் கல்வித் தரம்" சீர் பெற்று, சிறபபுடன் மேன்மை யடைந்து வருவது போற்றத் தகுந்த முன்னேற்றமாகும். இதறகெல்லாம் காரணமாக விளங்குபவர், பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பொறுப்பேற்றுள்ள, திரு. நெ. து. சுந்தர வடிவேலு அவர்களே ஆகும்.

"தமிழ் இன உணர்ச்சி, தமிழறிவு, கல்வித் துறையில் ஆழ்ந்தகன்ற அனுபவம்" ஆகிய சிறப்பான தகுதிகளுடன் துணிச்சலாக திட்டமிட்டுப் பணியாற்றும், திரு. நெ. து. சு.

அவர்கள் எளிமையான வாழ்வினை மேற்கொண்டு, வலிமையான சிந்தனையைத் துணைக்கொண்டவர். கல்வித் துறையில் 'மதிய உணவுத் திட்டம்' கொண்டு வந்து அதனை செம்மையுற நடைமுறையில் நடத்தியவர் புதுமையான பல செயல்களைக் கல்வித்துறையில் புகுத்தி வரும், திரு நெ து சு. அவர்கள் பழமையில் இருக்கும் நல்லனவற்றைப் பாராட்டத் தயங்காதவர். அண்மையில் அவரின் பொது நிகழ்ச்சி யொன்றில், "அவருடைய முன்னோர்க்கும் — சித்த மருத்துவத்திற்கும்" உள்ள தொடர்பினைப் பற்றிக் குறிப்பிட்டது என் கவனத்தினை ஈர்த்தது மட்டுமன்று; திரு. நெ. து. சு அவர்களின் "நல்லதைப் போற்றும்" பண்பினையும் உய்த்துணர வைத்தது

இந்த இதழ் தலையங்கம் எழுதுதற்குக் காரணமாக அமைந்தது, திரு நெ து சு. அவர்கள் 'சித்த மருத்துவம்' பற்றி கொண்டுள்ள மேற்கண்ட உயர்ந்த கருத்தே ஆகும். வாழ்க அவர்களின் திரு வுள்ளம்! வளர்க அவர்களின் நற்பணிகள், என்று வாசகர்கள் சார்பாக முதன் முதலாக, திரு நெ து சு. அவர்கட்கு மூலிகை மணி வாழ்த்து கூறும் வேளையில்,

அவர்கள், சித்த மருத்துவ வளர்ச்சிக்காக, அவர்களின் பதவி காலத்திலேயே செய்து முடிக்க வேண்டிய ஒரு நற்பணியை, இவ் வேண்டுகோள் மூலமாக, விடுக்கின்றோம்.

மாண்புமிகு, துணைவேந்தர் அவர்களே!

'மூலிகை மணி' வாசக அன்பர்கள் சார்பாக, இந்த வேண்டுகோளினைத் தங்கட்கு அனுப்புகின்றோம் அனுதாபத்துடன், ஆழ்ந்து நோக்கி, இந்த 'வேண்டுகோளினை' முழுமையாக நிறைவேறும் வகையில், வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வேண்டுகோளின் சுருக்கம் :

சென்னைப் பல்கலைக் கழகத்தில், "சித்த மருத்துவ இலக்கிய வரலாற்றுத் துறை" **(Department of History and Literature of Siddha System)** *என்று புதியதொரு துறையினை ஏற்படுத்தித் தருதலாகும்.*

இந்த வேண்டுகோளின் பின்னணி :

அமெரிக்காவில் உள்ள பால்டிமோர் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்தில், "History of Medicine" என்ற துறையின் இயக்குனராகப்

பணியாற்றிய, Prof. Henry E. Sigerist அவர்கள், 1944-ஆம் ஆண்டு இந்தியா வந்திருந்து, அப்போதைய இந்திய அரசுக்கு ஆலோசனை வழங்கிய 'Bohr Committee' என்ற குழுவினருக்கு, "இந்திய மருத்துவம் பற்றிய வரலாறு" குறித்து ஆலோசனை வழங்கினார்.

Prof. Sigrist advocates that, "In a country such as India, a centre of studies in the history of medicine is more necessary than any where else, because in India ancient and mediaval medicine are still alive and are practised on a large scale, it is no exaggeration to say that over whelming majority of the people of India receive medical care from Indigeneous Practitioners."

Prof. Sigerist, அவர்களின் மேற்கண்ட கருத்துப்படி, விடுதலைக்குப் பின் அமைந்த பாரத அரசு, ஐதராபாத்திலும், புது டெல்லியிலும், ஆகிய இரண்டு இடங்களில் "ஆயூர்வேத மருத்துவத் துறைக்கு மட்டுமே" வரலாற்று ஆய்வுத் துறையை அமைத்தது. 'சித்த மருத்துவத்திற்கு' என்று எதையும் 1970-வரை மத்திய அரசு செய்யவில்லை. காரணம், தென்னிந்திய பல்கலைக் கழகங்களில் 'சித்த மருத்துவம்' பற்றிய ஆய்வோ, அல்லது சித்த மருத்துவப் படிப்போ இல்லாத நிலைமை ஒரு காரணம். இரண்டாவது, தமிழக காங்கிரஸ் ஆட்சியில், 'சித்த மருத்துவம்' போதிய ஆதரவு பெருமல் ஒதுக்கவும் பட்டது, ஒடுக்கவும் பட்டது அப்போதிருந்த சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் இயல்பாகவே, 'சித்த மருத்துவம்' பற்றி ஏதும் அறியாதவர். பல்கலைக் கழகங்கள் போன்ற கல்விக் கழகங்களில், 'சித்த மருத்துவம்' புறக்கணிக்கப் பட்டதால், மத்திய அரசு 'சித்த மருத்துவம்' பற்றி உணரவோ, அன்றி அறியவோ இயலாது போய், "ஆயூர்வேதத்தில் ஒரு பகுதி சித்த மருத்துவம்" என்ற விபரீத முடிவுக்கு மத்திய அரசைக் கொண்டு வந்து விட்டார்கள். தமிழக ஆட்சியாளர்களும், சித்த மருத்துவர்களும், அசட்டையாக இருந்ததால் ஏற்பட்ட அவல நிலையால், சித்த மருத்துவம், 1970-வரை மத்திய அரசின் அங்கீகாரம் பெருமலே போராடி வந்தது

1967-இல் அமைந்த தி மு க. ஆட்சியினுலும், மக்களிடையேயும், சித்த மருத்துவர்களிடையேயும் மலர்ந்த தமிழ்க் கலைகளைப் பற்றிய காப்புணர்ச்சியினுலும், இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில், அறிஞர் அண்ணு, சித்த மருத்துவத்திற்கு அளித்த ஏற்றம், மக்களிடையே 'சித்த மருத்துவத்திற்கு' எழுச்சியினைத் தந்தது.

டாக்டர் பு மு. வேணுகோபால், டாக்டர் C. S. உத்தமராயன் மற்றும் அப்போது நலத்துறை செயலாளராக இருந்த திரு சி சிதம்பரம் ஆகியோரின் இடைவிடாத முயற்சிகளால், 'சித்த மருத்துவம்' தனி மருத்துவம் என்று நிருபிக்கப்பட்டு, மத்திய அரசு தற்போது தான் சில உதவிகளைச் செய்து வருகிறது.

இடையில், இந்த 20-ஆண்டுகளில், ஆயூர்வேத மருத்துவம், இந்திய முழுவதும் நன்கு வளர்க்கப்பட்டு, ஹைதராபாத்திலும், டெல்லியிலும், அதற்கென வரலாறு எழுத, இரு நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

தற்போதைய தமிழக அரசு, சித்த மருத்துவ வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமாக சில திட்டங்களை நடைமுறையில் செய்து வருகிறது பொதுவாக, கடந்த நான்கு ஐந்து ஆண்டுகளாக, பொது மக்களிடத்தும், தமிழக அரசிடத்தும், நல்லதொரு நம்பிக்கையை 'சித்த மருத்துவம்' பெற்று வருகிறது மகிழ்வுக்குரியதே

ஆயினும், நூற்றாண்டு விழா கொண்டாடிய சென்னை பல்கலைக் கழகத்தில், "சித்த மருத்துவம் பற்றி" ஒரு தனி ஆய்வுத் துறை, இல்லையே என்ற ஏக்கம்! எங்களுக்குப் பல காலமாக உள்ளது "நம் ஏக்கத்தினைச் சொன்னால் காது கொடுத்துக் கேட்பவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் அப்போது இல்லாத காரணத்தினால் ஏக்கம் நெஞ்சில் தேங்கி இருந்தது. ஆயின், தங்களின் வரவும், தங்களின் தமிழ்ப் பணியும் — சித்த மருத்துவத்திற்கு நல்ல காலம் வந்து விட்டதை எண்ணியே" இந்த நல்ல தருணத்தில் மேற்கண்ட வேண்டுகோளினைத் தெரிவிக்கின்றோம்.

"சித்த மருத்துவ இலக்கிய — வரலாற்றுத் துறையால் ஏற்படும் நன்மை பற்றி குறிப்பிட வேண்டுமானால், Prof. Sigerets அவர்களின் கீழ்க்கண்ட கருத்தினையே மேற்கோளாகக் காட்டுவது சிறப்பாகும்.

"The history of medicines is both history and medicine. It is a historical discipline like the history of art or the history of philosophy. It helps to give us a more complete picture of the history of civilization, because it is obviously not un important to know what diseases affected the people in the past, what they did to protect and restore their health and what thoughts guided their action."

> Mr. Vice Chancellor,
>
> It is therefore recommended, that a study on Siddha system helps to give us a complete picture of the history of civilization of ancient Tamils, the nature of their diseases, healths and other social conditions from time immemorial.

இந் நற்பணி நல்லபடி ஈடேற, தாங்கள் பல்கலைக் கழக அளவில் செய்யக்கூடிய உதவிகளை அன்புகூர்ந்து மேற்கொள்ளவும். 'திருக்குறள் ஆராய்ச்சித் துறை' நிறுவப்பட்ட பிறகு, இன்று சென்னைப் பல்கலைக் கழகத்தின் வாயிலாக, திருக்குறள் இந்தியா முழுமையும் ஆய்வுக்குரியதாகி விட்டதனை, சென்ற ஆண்டு நடந்த 'அகில இந்திய திருக்குறள் ஆய்வுக் கருத்தரங்கு' நிருபித்துள்ளதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

அது போல், 'சித்த மருத்துவ இலக்கிய — வரலாறு' ஆய்வுத் துறை, சென்னைப் பல்கலைக் கழகத்தில் அமையுமேயானால், விரைவில் சித்த மருத்துவம், அகில இந்திய பல்கலைக் கழகங்களிடையே செல்வாக்கு பெற முடியும் என்பதனையும் தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

இந்த துறை நிறுவ நிதி வசதி பற்றி தங்கட்கு கீழ்க்கண்ட ஆலோசனை கூறுகிறோம்.

மத்திய அரசில், புது டெல்லியில் Central council for Research in Indian Medicine (CCRIMH) என்றொரு அமைப்புள்ளது. பல்கலைக் கழகங்களில், இத்தகைய ஆய்வுத் துறைக்காக, நிதி உதவியினை மேற்கண்ட CCRIMH உதவுகிறது. ஹைதராபாத்தில் இயங்கும் ஆயுர்வேத துறை CCRIMH-உதவியால் இயங்குகிறது.

இரண்டாவதாக, U. G. C. மூலமாக இத்தகு ஆய்வுக்காக மானியம் கேட்டு உதவி பெறலாம்.

மூன்றாவதாக, தமிழக அரசிடம் உதவி கோரலாம்.

இறுதியாக, தங்களிடம் வெகு நாட்களாக கூற வேண்டி மனதில் வைத்திருந்த இந்த வேண்டுகோளினை, சித்த மருத்துவத்திற்கு வேண்டிய நல்ல காலமும் — கருத்தும் ஒருங்கே வந்துள்ள இந்த நல்ல தருணத்தில், தங்களிடம்

'கூற வேண்டியவரிடம் — கூறியுள்ளோம்'

என்ற மனநிறைவுடன் மேற்கூறிய வேண்டுகோளினைப் படைக்கின்றோம். ஆவன செய்வீராக! வணக்கம்.

இங்ஙனம் : மூலிகை மணி ஆசிரியர்.

தஞ்சை சரசுவதி மகால், 'Literary Research Unit' பற்றிய தலையங்கத் தொடர்-2.

கேள்விக் கென்ன பதில்!

சித்த மருத்துவ வளர்ச்சிக்குத் தடையாக சில நிகழ்ச்சிகள், தஞ்சை சரசுவதி மகால் Literary Research Unit-இல் நடப்பதாக, நமக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில், சில கேள்விகளை CCRIMH-ஐக் கேட்டிருந்தோம். அத்துடன்,

(1) சித்த மருத்துவ ஆய்வு நூல்களை உடனடியாக அச்சுக்கு அனுப்பவும்,

(2) சித்த மருத்துவ ஆய்வுக்கு,— முதுநிலை ஆய்வாளர் ஒருவரையும், இளநிலை ஆய்வாளர் இருவரையும்

தற்போது ஆயூர்வேதத்திற்கு அமைத்திருப்பது போல் நியமிக்க வேண்டி வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

ஒரு மாத காலமாகியும். இவற்றிற்கு எவ்வித பதிலும், சரசுவதி மகால் Literary Research Unit-லிருந்தோ, C C R I M H-லிருந்தோ வரவில்லை. காரணமும தெரியவில்லை.

'Literary Research Unit' போன்ற அரசு அமைப்புகள் எக்காரணம் பற்றியும் பாரபட்சமாக நடப்பது சட்டப்படி குற்றமாகும். ஆனால் நடக்கின்ற நடப்புகள் பாரபட்சமாகவே தோன்றுவதாக நமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்த நிலைக்கெல்லாம் காரணம், அதிகாரம் ஒரு இடத்தில் குவிந்திருப்பதுதான். தஞ்சை சரசுவதி மகால் தொடர்புள்ள செய்திகளை அதன் அதிகாரியிடம் கேட்டால், 'டெல்லிக்கு எழுதுங்கள்' என்று பதில் கூறுகிறார்கள். டெல்லிக்கு எழுதினால், "உங்கள் கடிதம் வரவில்லை" என்கிறார்கள், அல்லது பதிலே போடாமல் மௌனமாகி விடுகிறார்கள். இவைகளை யெல்லாம் பார்க்கும் போது, சென்ற இதழில் வெளியிடப்பட்ட செய்திகள் வன்மை பெறுவது மட்டுமல்ல ; மேலும் பல சந்தேகங்கட்கு வித்திடுகின்றன. இன்னும் சற்று ஆழ்ந்து கூற வேண்டுமானால், 'Literary Research Unit' கடந்த இதழ் செய்திகளை மறுக்க இயலாமல்,

"திருடனுக்கு தேள் கொட்டிய நிலை போல்"

இருக்கிறதோ என ஐயுற வேண்டியுள்ளது

எப்படியோ, இன்னும் ஒரு மாதம் வரை பொறுத்திருந்து பார்ப்போம். நம்முடைய வேண்டுகோள்கட்குச் சரியான பதில் கிடைக்காமற் போனால்,

★ போராடியாவது அவற்றை நிறைவேற்றுவோம்!



'முந்திரி'

[158-வது மூலிகை]

மனிதனால் படைக்கப்பட்ட பொருள்கள் அனைத்தும், கால மாறுபாடுகளின் அடிச்சுவடுகளின் கீழ் அழியும் தன்மையனவாகவே அமையும்; என்றால் இதை மறுப்பவர் இல்லை இன்று 'பவர் கட்' என்ற காரணத்தால் சாதாரணமாகக் கிடைக்கக் கூடிய பொருள்கள் அனைத்தும் அகவிலையாக்கப்பட்டது! ஆனால்,

இறைவனால் ஆக்கப்பட்ட படைப்புகள் அனைத்தும் அழியும் தன்மையாகாது என்பதனை இயற்கைத் தாவர இனங்களால் அறியலாம். இறை சக்தி எதையும் செய்யும் என்பதனை இயற்கைப் படைப்புகள் நமக்கு உணர்த்துகின்றன. மனிதன் மின் சக்தியைக் கண்டு பிடித்து அதன் மூலம் பல இயந்திரங்களையும் இயங்க வைத்தவன் அந்தப் பொறிகளுக்கு இரையாக பவர் (மின்சக்தி) இல்லாமல் கட்டுப்பாட்டுக்குட்பட்டு இயங்குகிறான் மனிதன்.

இயற்கை படைப்பில், பழத்திற்கு உள்ளே தான் கொட்டை, பருப்பு ஆகியவைகள் இருக்கும் அல்லவா? ஆனால் இறைவன் இந்த

சட்டத்துக்கு மீறி கொட்டையைப் பழத்திற்கு வெளியேயும் வைத்துக் காட்டினுர்! அது தான் முந்திரிக் கொட்டை. "நான் நினைத்தால் எப்படியும் செய்வேன்; எதையும் செய்வேன்" என்பதைச் சொல்லாமல் காட்டியிருக்கிறுர் இறைவன் நமக்கு. இது போல் பூத்துப் பின் காய்க்கும் இயற்கையில். அதே இயற்கைப் படைப்பில் காய்த்துப் பின்பு பூக்கிறது — பூசணிக்காய்! அல்லவா? இதே பூசணிக்காயை பிஞ்சாக உள்ள போது ஒரு பானையின் உள்ளே வைத்து விட்டு சிலநாள் தண்ணீர் ஊற்றிவர பானை உள்ளேயே பூசணிக்காய் பெரியதாகி விடும். பிறகு ஒரு விஞ்ஞானியை கூப்பிட்டு பானையை உடைக்காமல் அந்தக் காயை எடுக்கச் சொல்லுங்கள் பார்ப்போம்? அகில உலக விஞ்ஞானிகள் ஒன்று கூடினுலும் நடவாத காரியம். இந்த அற்ப விஷயத்துக்கே இப்படி என்ருல் இயற்கை படைப்பை நாம் அலட்சியமாகக் கருதமுடியாதல்லவா?

சரி! முந்திரியைப் பற்றி நாம் ஆய்வோம். முந்திரி செடியுமல்ல, மரமும் அல்ல! சிறுமர வகுப்பைச் சேர்ந்த இது இந்தியா வெங்கும் மணற்பாங்கான நிலங்களில் வளரும். ஏறக்குறைய மருதாணி என்ற அழவண மர உயரத்திற்கு மேல் இது வளராது. இதன் இலைகள் பாதாம் இலையைப் போல் முனை வட்ட வடிவமாக இருக்கும். சிலர் இதன் இலைகளை தைத்து உணவு சாப்பிடவும் பயன்படுத்துவார்கள். பொதுவாக இந்த முந்திரி — பனைமரம் போலவே தண்ணீர் ஊற்றி வளர்க்க வேண்டிய அவசியமில்லை. தன்னிச்சையாகவே வளரும் குத்து மரங்களில் இதுவும் ஒன்று. தரிசாக கிடக்கும் நிலங்கள், புறம்போக்கு வெளிகளில் இந்த முந்திரி தன்னிச்சையாகவே வளரும். அதனுல் தான் பனைமரக் காடு, முந்திரிக் காடுகள் என்று அரசாங்க பதிவேடுகளில் குறிப்பிடுவர். இன்று நெய்வேலி லிக்னைட் இருக்குமிடங்கள் எல்லாம் முந்திரி காடுகளாகவே இருந்தன என்பதை பலர் அறிவார்கள்.

முந்திரிப்பழம் ஒரு ஜாடி வடிவம் போல் மஞ்சளும் சிவப்பும் கலந்து மிருதுவாக இருக்கும். அதற்கு மேலே கொட்டை இருக்கும். அந்த கொட்டை குரங்கு உட்கார்ந்து இருப்பது போல காட்சிதரும். இது பற்றியே தமிழ் பழமொழியில் விடுகதையாக, "ஜாடி மேல் குரங்கு" என்பார்கள். அது முந்திரிக் கொட்டை! சில சிறுவர்கள் பெரியோர் பேச்சுக்கு குறுக்கே, அசட்டுத் தனமாக கேள்விகளைப் போடுவார்கள். இவர்களை எல்லாம் "முந்திரிக் கொட்டை" சும்மா இருடா என்று சொல்வது உங்களுக்கும் தெரியுமே! காய், பழம் ஆகு முன்பே முதலில் கொட்டையை வெளியே வைத்துக் காட்டியது

இம் மாதிரியான குழந்தைகள் மனித இனத்திலும் பிறந்து பெரியோர் கட்கு முன்பே தலைநீட்டும் என்பதை இயற்கைத் தாவரங்களின் படைப்பின் மூலமாக மனித சமுதாயத்திற்கு இறைவன் உணர்த்தி இருக்கிருன் என்றும் நினைக்கலாமல்லவா ?

முந்திரியின் பயனும் குணமும்

முந்திரி பழம், பருப்பு, பட்டை, வேர் ஆகியவற்றிற்கு தனித் தனி குணவிசேடம் உண்டு. பழம் சிறுநீரைப் பெருக்கி, வெப்ப முண்டாக்கும். விதை அல்லது முந்திரிப் பருப்புக்கு உடல் உரமாக்க வும், காமம் பெருக்க வைக்கும் சக்தியுள்ளது. ஆனால் பித்தம் அதிகரித்து விடும். இதன் மரப்பட்டைக்கும் வேருக்கும் துவர்ப்பிச் செய்கையுடையதால் பலவித மருந்துகளுடன் கூட்டுப் பொருளாகச் சேர்க்க உதவுகிறது.

பருப்பு

முந்திரிப் பருப்பை எல்லா வகுப்பினரும் மிகப் பிரியமாகத் தின்பார்கள். இதன் ருசியே தனி! ஆங்கிலத்தில் இதனை கேஷ்யூ நட் என்பார்கள். நெய் விட்டு பொன் வறுப்பாக வறுத்து காகிதப்பை களில் விற்பனை செய்வார்கள். முந்திரிப் பருப்பை அளவுடன் தின்ருல் தாது விர்த்தியாகும். நிறைய சாப்பிடுவோர்க்கு பசி மந்தப் படும், காமம் பெருக்கிவிடும். பித்த வாத தொந்தங்களால் காய்ச்சல், உடல் உழச்சல், வலி ஆகியவைகளைத் தோற்றுவிக்கும். எனவே, சித்த மருத்துவத்தில் பல கூட்டுப் பொருள்களுடன் சேர்த்து இனிப்பு இனகல் வகையாக சேர்த்து தருவது நமது நாட்டு மருத்துவ மரபாகும்.

முந்திரிப் பழம்

பழத்தின் சாறு ஒருவித விறுவிறுப்பும், காரலும், இனிப்பும், புளிப்பு சுவையுள்ளதாக இருக்கும். பழத்தை பிரியமாகத் தின்பார் கள். பழத்தில் கெடுதி ஒன்றும் இல்லாவிடினும், அதிகமாக நீர் இறங்கும். அதே சமயம் உடல் உஷ்ணத்தைத் தரும். மதுமேக நீர் (சர்க்கரை) வியாதி உள்ளவர்கள் இந்த முந்திரிப் பழத்தைத் தின்ன நீரில் சர்க்கரை குறையும், அடிக்கடி நீர் போவதும் நிற்கும். முந்திரி பழரசத்தில் சாராயம் காய்ச்சுவது உண்டு. இந்த சாராயத்தை ஜின், ரம், போன்ற மேநாட்டு சாராயத்துடன் கலந்து விற்பனை செய்வார்கள்.

முந்திரிக் கொட்டையின் மேல்புற ஓட்டிலிருந்து ஓர் தைலம் இறக்குவார்கள். இந்த தைலம் மிக்க காரமும் ஓர்வித நறுமணமும் உடையதாகும். இந்த தைலத்தின் வாடையால் ஈ, கொசு, கரையான் போன்ற பூச்சிகள் விலகும். அஃதன்றியும் இந்த தைலத்தை கால் பித்த வெடிப்புக்களில் தடவிவர வெடிப்புக்கள் மாறும், புண் ஆறும்.

மேலும் பலவகை மருக்கள், பாலுண்ணிகள் உடலில் தோன்றும் போது மேல்படி தைலத்தை தடவ அவை மறைந்து விடும்.

முந்திரிப் பருப்பினின்றும் ஓர் வித எண்ணை எடுப்பார்கள். இந்த எண்ணை குடலில் உண்டாகும் புண்களை ஆற்றிவிடும் சக்தி படைத்தது. எனவே இந்த எண்ணையை தக்க அனுபானங்களில் குன்மம், வயிற்று ரணம் போன்ற வியாதிகளில் கொடுத்து குணப் படுத்தி விடலாம். இந்த எண்ணை எல்லாவித விடங்களையும் முறித்து விடும்.

(சர்க்கரை) மதுமேக நீரிழிவுக்கு

முந்திரி மர வேர்ப் பட்டை 1 பலம் எடுத்து இடித்து மண் சட்டியில் போட்டு 1 படி நீர் விட்டுக் காய்ச்சி கால் படியாக சுண்ட வைத்துக் கொண்டு காலை மாலை இரு வேளை தவருமல் குடித்துவர ஆங்கிலத்தில் 'டயாபடீஸ்' என்று பெயர் கொடுத்து செல்லமாய் வளர்க்கும் சர்க்கரை நோய் 20 முதல் 40 நாட்களில் உடம்பை விட்டு விலகும். ஆனால் உடம்பில் ஆங்கில மருந்து அளவுக்கதிக மாய்ச் சாப்பிட்டதின் பலனால் உடல் உணர்ச்சி குறைந்தவர்கட்கு இம் முறை பயன் தருவது சற்றுக் கடினமே!

ஓமியோபதியில் முந்திரி

ஓமியோபதி மருத்துவத்தில் அனகார்டியம் ஓரியண்டேல் என்பது, முந்திரிக் கொட்டையின் பாலில் இருந்து எடுக்கப்பட்டு வீர்யம் செய்த மருந்தாகும். இந்த மருந்தை 200 வீர்யத்தில் கொடுப்பது சிறப்பு என்கிறார் டாக்டர் பாரிங்டன். குட்டரோகங்கள் போன்றவைகட்கு 6 X வது வீர்யத்தில் நல்ல குணம் கண்டதாக கூறுகிறார் டாக்டர் மகேந்திர சர்க்கார். இம் மருந்தின் முக்கியமான குணம் யாதெனில், "முளை இருப்பது போன்ற உணர்ச்சி, ஆசனவாய், கண், மூக்கு ஆகிய இடங்களில் அடைப்பு இருப்பது போல் நினைவு" மேலும் நினைவு ஆற்றல் குறைந்த

வர்கட்கும், அம்மை போன்ற சர்ம நோய்களில் இந்த முந்திரிப் பால் அருகார்டியம் ஓரியண்டேல் பயன்படுவதாக மேல்படி நூல்களில் காணக் கிடக்கின்றன.

முன்பு முந்திரிக் காடாக இருந்த இடமெல்லாம், தற்காலம் சீமை முள், வேலிக்காத்தான் செடிதான் பிசாசு போல் வளர்ந்து விட்டு இருக்கிறது. மனிதன் வாழும் கூடாரத்தில் ஒட்டகம் புகுந்த மாதிரி இந்த சீமை வேலி முள் புகுந்து விட்டது. முந்திரி போன்ற நற்பலன் கிடைக்கும் மூலிகைகள் எல்லாம் இனவிர்த்தியாகாமல் மறைந்து வருவது காட்டிலாவுக்கு மட்டும் நட்டமல்ல. பல நல்ல மூலிகைகள் மறைந்து, பூண்டுடன் அழிந்தால் தீராத நோய்கட்கு எல்லாம் ஆங்கில மருந்துகள் எமனாகவே வந்து முடிவு கட்டும் என்பதை திடமாக கூறலாம்.

"மெத்த இனிப்பாகும் அது மென்கொடியே தின்றக்கால்
பித்த அனிலம் பிறக்குமென்பர் — எத்தலத்தும்
இந்திரியப் புட்டி யிளேக்காது மாந்தம் உண்டாம்
முந்திரியின் நற்பருப்பை முன்." (கு. மு.)

மகா மூலிகை எண்ணெ!

- காலில் ஆணி,
- தோலைப்பற்றிய நோய்கள்,
- வெண்குட்டம்,
- உடலில் அசுத்தநீர்த் தேக்கம்,
- ஊளைச் சதை,

போன்ற கொடிய நோய்களை வேருடன் களைய மேற்கண்ட "மகா மூலிகை எண்ணெ" யை பத்தியமுடன் சாப்பிட ஆச்சர்யமடையும் வகையில் குணமாகும். மேக நோய்கள் உடையவர்களுக்கு இந்த எண்ணெ ஓர் சிறந்த நிவாரணியாகும். ஷெ எண்ணெயை பெற விரும்புவோர், 25-காசு தபால் தலையுடன் எழுதவும்.



— முன் மாதத் தொடர்ச்சி

நீர் கடுப்பு, நீர் சுருக்கு நிற்க

சிறுநீர் கடுப்புடன், எரிச்சலாக சொட்டு சொட்டாக போவதற்கு கீழாநெல்லிச் செடியை வேருடன் எடுத்து அலசி மண்ணைப் போக்கி அத்துடன் சீரகம் 1 சிட்டிகை சேர்த்து அரைத்து நெல்லிக்காயளவு உருண்டையை தினமும் காலையில் வாயிலிட்டு, காய்ச்சிய பசும்பால் 200 மில்லி குடித்துவர 1 வாரத்திற்குள் நீர் கடுப்பு நிற்கும்.

தானுகவே சிறுநீர் ஒழுகும் நோய்கள் நிற்க

தானிக்காய், சர்க்கரை சமன் சேர்த்து தூள் செய்து வைத்துக் கொண்டு காலை மாலை இரண்டு வேளை பாலில் 2 சிட்டிகை வாயிலிட்டு சாப்பிட 10 நாளில் தானுகவே சிறுநீர் ஒழுகும் பகுமூத்திரம் நிற்கும்.

நீரில் சர்க்கரை போவது நிற்க

வெள்ளருகு சமூலம் 5 பலமெடுத்து பொன் வறுவலாக வறுத்து ஒரு படி தண்ணீர் விட்டு கால்படியாக்கி வேளை 1-க்கு 50 மில்லியாக தினம் 2 வேளை 10 நாள் சாப்பிட நீரிழிவு வியாதி நீங்கும்.

வேறு ஒரு முறை

கீழாநெல்லிச் சமூலம் 50 கிராம், மிளகு 25 கிராம் 1 படி தண்ணீரில் தட்டிப் போட்டு 16-ல் 1 பங்காக சுண்ட வைத்துக் கொண்டு 10 மிளகு தூள் செய்து போட்டு அரை அவுன்சு வீதம் காலை மாலை குடித்துவர 20 நாளில் நீரிழிவு நீங்கிவிடும். (தொடரும்)

அனுபவம் உணர்த்தும் உண்மை! ★

A. M. K. சாமி, 7—8—78

கும்பகோணம்.

உயர்திரு, டாக்டர் அவர்களுக்கு,

சென்ற 5, 6 வருடங்களாக தினமணி சுடரில் வெளிவந்த தங்களுடைய மூலிகை பிரசுரத்தை, கவனமாக சேகரித்து வைத்துக் கொண்டு, அதில் கண்ட முறைப்படி, அதாவது "முடக்கறுத்தான்" இலையைக் கொண்டு தைலம் காய்ச்சி சில நண்பர்களுக்கு இருந்த கால் முடக்கு இவைகளுக்குத் தங்களுடைய முறைப்படி உபயோகித்து பூரண சுகம் அடைந் தார்கள். மற்றும் "இலந்தை" இலையை கர்ப்பம் தரிக்காமல் இருந்த பெண்களுக்கு, தாங்கள் எழுதியபடி கொடுத்ததில் கர்ப்பம் தரித்து, தங்களுடைய சேவையை மனமார வாழ்த்திக் கொண்டு இருக்கிறார்கள். இன்னும் பல இருக்கின்றன.

V. M. வாசுதேவன், அரச்சலூர் P. O.

ஈரோடு Tk.

அன்புள்ள மூலிகை மணி ஆசிரியர் அவர்களுக்கு,

இங்கு 7-வயதுள்ள ஒரு பையனுக்கு தலையில் பூராவும் புண் ஏற்பட்டு நீர் கசிந்தபடி இருந்தது ஆங்கில மருந்தினால் குணமாகா மல் இருந்தது மலையில் இருந்து சுண்டைக்காய் செடி கொண்டு வந்து இலையின் சாறு பிழிந்து தலையில் 5-நாள் தேய்த்து வைத்திருந் ததில் புண் ஆறி பூரண குணமடைந்தது

டாக்டர் **P. வைத்தியநாதன்,** 28—8—78

தாம்பரம் சானடோரியம்.

மூலிகை மணி ஆசிரியர் திவ்ய சமூகத்திற்கு,

இருமலால் கஷ்டப்படும் வியாதியஸ்களுக்கு தூதுவளையும் ஆடாதொடையும் (சமூலம்) பொடியை கொடுத்து வந்ததில் பூரண சுகம் 15-நாட்களில் கிடைக்கிறது.

இதய ஒலி!

வேங்கட சுப்பராயன்,

65, கன்னார வீதி,
இடைப்பாடி P. O. சேலம் Dt.

அன்புடைய நண்பர், திரு. க. வேங்கடேசன் அவர்களுக்கு,

தாங்களும், தங்கள் நண்பர், திரு நாராயணன் என்பவரும் ஆராய்ந்து எழுதி, மாசி மாத மூலிகை மணியில் வெளியான கட்டுரை "நாகரிக உலகில் நாட்டுப்புற மருத்துவம்" — மகத்தான சிறப்பு வாய்ந்த ஒன்று. யாவரும் அறியவேண்டியதொன்று "புகைப் பிடித்தல் பற்றிய ஆய்வுத் தொடர்" இத்துடன் முடியும் என எதிர் பார்க்கவில்லை. வகுப்பறையில் மாணாக்கரிடையே நான் படித்துக் காட்டி, அவர்களை நல்வழியில் திருப்ப உதவியது. இதே போல் "மது........" போன்றன பற்றியும் எழுத வேண்டுகின்றேன்.

இப்படிக்கு, வேங்கட. சுப்பராயன்.

A. நாகரெத்தினம், S. M. P.

மருதம்பட்டிணம்,
திருவாரூர் P. O.
நாகை தாலுக்கா, தஞ்சை ஜில்லா.

உயர்திரு, மூலிகை மணி ஆசிரியர் அவர்களுக்கு,

தமிழகத்தில் சித்த வைத்தியம் மக்கள் முன் பளிச்சிட்டுப் பிரகாசிக்க வேண்டும். ஆங்கில மருத்துவத்தை ஓட ஓட விரட்ட வேண்டும். அது உங்களால் (மூலிகை மணியால்) தான் முடியும். விரைவில் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள சித்த மருத்துவர்களைக் கூட்டி மகாநாடு போட்டு உலகுக்கு எடுத்துக் காட்ட வேண்டும் என்பது என் ஆசை; அதை உங்களால் தான் நிறைவேற்ற முடியும். இன்னும் நாட்டில் எத்தனையோ சித்த மருத்துவர்கள் இருக்கின்ற இடம் தெரியாமல் இருக்கின்றனர். அவர்களையும் வெளி உலகுக்கு கொண்டுவர வேண்டும்.

இப்படிக்கு, A. நாகரெத்தினம், S.M.P.

வே. மு பொதியவெற்பன்,

20, குடியானத் தெரு,
குடந்தை.

அன்பினியீர்!

"சிவப்பு விளக்குத் தொடர்" (ஆசிரிய உரை) மிகச் சிறந்திலங்குகின்றது. மணிப்பிரவாளப் — ப்ரவாகத்தால் தமிழகம் பட்ட பாடு போதாதா? இன்னுந் தமிழினந் தலையெடுக்காவிடில் என்னே மாக்கொடுமை! நுந் தம் துணிவுளத்தையும், ஆய்வுப் பணியையும் பெரிதும் போற்றுவல். "இழுக்க ... ... இழுக்க?" நல்ல சிந்தனைத் தொடர். நும் பணி தொடர்ந்து சிறக்க. நன்றி!

இவண்: வே. மு. பொதியவெற்பன்.

உ

[இப் பகுதியில் வாழ்க்கைக்கு பயன் தரும் எந்தவித கேள்விகளும் இடம்பெறும். கேள்வி கேட்பவர்களின் பெயர் அவசியமிருந்தாலன்றி வெளியிடப்பட மாட்டாது. எல்லோருக்கும் பயன்படும் கேள்விகள் எதுவாயினும் சரி அவைகட்கு முதலிடம் தரப்படும். இப் பகுதியில் ஐந்து ஆண்டுகளாக தொடர்ந்து வந்த கேள்வி — பதில்களை மருத்துவ சம்பந்தப்பட்ட வரையில் தனியாக "நோயும்-மருந்தும்" எனத் தனி நூலாக வெளியிடப்பட்டுள்ளது. தேவையுள்ள அன்பர்கள் முன் பணம் மணியாடர் அனுப்பி பெறலாம். சினிமா சம்பந்தப்பட்ட கேள்விகள் கவனிக்க பட மாட்டாது. கூடியவரையில் மருத்துவம், சமூகம், சமயம் பற்றிய கேள்விகளுக்குத்தான் முதலிடம்.]

* * *

கே: என் வயது 60 ஆகிறது. வலது காது சிறு வயதிலிருந்தே செயலற்றுப் போய்விட்டது. செவிப்பறையில் ஓர் துவாரம் இருப்பது தெரிகிறது. ஆனால் இடது காதில் நீர் கசிந்து வருகிறது. அப்போது தலை பாரம் உண்டாகி விடுகிறது. அநேக பூச்சிகள் கத்துவது போல தோன்றுகிறது. சில சமயம் இடது காதிலிருந்து சீழ் வருகிறது. காது சரியாக கேட்க முடியவில்லை. தொண்டையில் கபமும் உண்டாகிறது. இவை நீங்கி குணம் காண ஒரு யோசனை கூறவும்.

ப: அன்புள்ள ஐயா, தங்கட்கு வயதோ 60 ஆகிவிட்டது. செவிப்பறை பழுதடைந்து விட்டது பற்றிக் குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனாலும் இனி தங்கள் செவிப்பறை பழுதடைந்து விட்டது எந்த மருந்தாலும் குணம் காணாது. என்றாலும் நீர் தூதுவளைக் கீரையை நெய் விட்டு வதக்கிப் பின்பு துவையலாகச் செய்து மீண்டும் நெய் விட்டு சோற்றுடன் பிசைந்து தினம் தவறாமல் 40 நாள் சாப்பிட்டு வாரும். இதை விட வேறு மருத்துவத்தால் உங்கள் காது செவிப் பறை பழுதடைந்தது குணமாகாது! ஆமாம் இது உண்மை

வீணாக ஆங்கில மருத்துவ முறையை நாடாமல் நாட்டு மருத்துவ மான மூலிகை 'தூதுவளையை' நம்பி சொன்னபடி செய்தால் உங்கள் செவிப்பறை 25 சதவிகிதமாவது குணம் காணும்.

கே! தங்கள் கார்த்திகை மாத 'மூலிகை மணி' இதழ் பக்கம் 79-ல் விளக்கியுள்ள 'பஞ்சகற்ப ஸ்நானம்' எவ்வளவு நாட்களுக்கு ஒரு முறை செய்யலாம்? தேய்த்துக் கொண்டு கொஞ்சம் நேரம் ஊறி ஸ்நானம் செய்யலாமா?

ப: பஞ்சகற்ப ஸ்னானம் 7 நாட்களுக்கு ஒரு முறை (சனிக் கிழமை செய்தல வேண்டும. தலைக்குத் தேய்த்துக் கொண்ட பிறது ஒரு பத்தைந்து நிமிடம் கழித்து குளித்து, உடனே துடைத்துக் கொள்வது சிறப்பு.



தூதுவளை

கே: 'பசளைக் கீரை' யை தினமும் சாப்பிடலாமா? அதற்கான விசேஷ பக்குவமுறை இருப்பின் தெரிவிக்கவும்.

ப: பசளைக் கீரை குளிர்ச்சியைத் தரும் குணம் கொண்டது. எனவே அதை வாரம் (7 நாட்களில்) 3 நாள் தான் பயன்படுத்த வேண்டும். அதிகமாக பயன்படுத்தினால் உடம்பு குளிர்ச்சி தரும்.

கே: ஐயா, ஒரு சிலர் மாலையிலும் சூரியநமஸ்காரம் செய்வதைப் பார்க்கிறேன். செய்யலாமா? கூடாதா?

ப: சூரியநமஸ்காரம் என்பது காலையில் உதிக்கும் சூரியனை மட்டும் வணக்கம் செலுத்துவதில் பயனில்லை. மாலையில் மறையும் சூரியனையும் கண்டு வழிபடவேண்டும். அப்பொழுது தான் முழுப் பலனும் கிடைக்கும்.

கே: சிரசாசனம் தினம் ஒரு நிமிடம் நிற்கச் சொல்லி யிருக்கிறீர்கள். சுவரின் உதவியுடன் தான் நிற்க முடிகிறது. எவ்வளவு முயன்றும் சுவர் உதவியின்றி செய்ய முடியவில்லை. இவ்வாறு செய்தால் பலன் கிட்டுமா? கிட்டாதா?

ப: சிரசாசனம் ஒரு மூலையில் சுவரின் உதவியைக் கொண்டு நிற்பது; பிறர் உதவி இன்றியோ அல்லது சுவரின் உதவி இன்றி யோ தலைகீழாக நிற்பது பழக்கம் தரும் அனுபவம். எனவே நீங்கள் சுவரின் உதவியால் மட்டும் நிற்கலாம்.

கே: மதுமேகம் உள்ளவர்களுக்கு பிறக்கும் குழந்தை கள் பார்வைக் குறைவு, கண் கோளாறுகளுடன் பிறக்கும் என்று கூறுகிறார்கள். அதை நீக்க என்ன செய்யவேண்டும்? நான் பார்த்த அளவில், மதுமேகம் உள்ளவர்கள் குழந்தைகள் பார்வைக் குறையுடன் தான் காணப்படுகின்றனர்.

ப: கேள்வியே உள்ளங்கை நெல்லிக்கனி போல உள்ளது. மதுமேக நீர் உடம்பினர்கட்கு பிறக்கும் குழந்தைகள் எல்லாருக்கும் அப்படி கண் கோளாறு வராது தாய் தந்தையர் இருவருக்குமே மதுமேகம் இருந்தாலும் பரம்பரை நோயாக மதுமேகம் தான் 40 வயதைக் கடந்தவர்கட்கு வரும். பொதுவாக கண் கோளாறு தற்காலம் Refined oil, Vegetable oil என்று சொல்லப்படும் வாசனை நீக்கிய வனஸ்பதி எண்ணெ உபயோகிப்போர்க்கு நிச்சயம் கண் கோளாறுகள் உண்டாகும். இதில் ஐயமே இல்லை.

கே: எனது தாத்தாவின் வயது 65. கண்ணில் சதை வளர்ந்து உறுத்தலும், நீர் வடிதலும் ஏற்படுகிறது. இதற்கு தங்களின் அரும் மருந்தான நேத்திரப் பூண்டு தைலம் வாங்கி உபயோகிக்கிறோம். தாத்தா சூரியநமஸ்காரம் செய்த பின் கண்ணில் விடுவதா, அதற்கு முன்னரா என்று கேட்கிறார். (பொதுவாக காலையில்) என்று குறிப்பிட்டுள்ளீர்கள்.

ப : 65 வயதுடைய உமது தாத்தா சூரியநமஸ்காரம் செய்கிறார். நீங்கள் செய்கிறீர்களா? !! நேத்திரப் பூண்டு தைலம் அதிகாலையில் 1 துளி விட்டு கண்களை கழுவிவிட்ட பின்னர் குளித்துப் பின்பு சூரியநமஸ்காரம் செய்யலாம்.

கே : என் தாயாருக்கு வயது 55. உடல் முழுவதும் நீர் சுரந்து, உடல் ஊதிப் பருத்து வருகிறது. கை கால் மூட்டுக்கள், பாதம், முழங்கால் இடைவிடாது வலி தாங்க முடியவில்லை. 3 வருடமாக ஆங்கில மருத்துவம் செய்தும் பலனில்லை. தங்களுடையை மருத்துவ முறை கூறுங்கள்.

ப : ஐயா, உத்தாமணி இலையைப் பறித்து மண் சட்டியில் விளக்கெண்ணெய் விட்டு வதக்கியச் சூட்டுடன் கை கால மூட்டுகள் பாதம், முழங்கால்களில் இடைவிடாமல் ஒத்தடம் கொடுத்து வர நிச்சயம் வலிகள் நீங்கி சுகம் காணும் என்பதில் ஐயமில்லை.

கே : சின்னச் செடி இலைகளுடன் மூன்று (அ) நான்கு மிளகு வைத்துத் தின்றால் தேள்கடி விஷம் இறங்குமென்று சொல்லுகிறார்களே. அது உண்மைதானா? அப்படியானால் அம் மூலிகையின் பலன் விவரம் தெரிவிக்கவும்.

ப : உண்மை தான்! சின்னி என்பது பராசக்தியின் அம்சம். வேம்பு போன்ற குணமுடையது. அது எங்கள் வேலூர் மருத்துவ மனையில் உள்ளது. அதை யான் பிரதி ஞாயிறு தோறும் (3) முறை வலம் வந்து வணங்கி வருகிறேன். அதை வணங்குவதால், நாம் நினைத்தது நிறைவேறும்.

கே: இரத்தக்கொதிப்பு எதனால் ஏற்படுகிறது? ஆங்கில மருத்துவத்தில் நிரந்தரமாக நோய் தீர்ந்தபாடில்லை. அதற்கு சித்த முறை - பச்சிலை மருத்துவம் ஏதாவது இருப்பின் கூறவும்.

ப: கோபத்தால் விளைவது ரத்தக் கொதிப்பு. கோபம் வருவது — சிந்தனை இல்லாத நிலை. சிந்தித்து நல்லது கெட்டது எது என்பதை அறியமுடியாதவனுக்குத் தான் ரத்தக் கொதிப்பு ஏற்படும். ரத்தக் கொதிப்பு என்பது ஓர் "நல்ல பாம்பு". எந்த மருந்தாலும் குணப்படுத்த முடியாத நோய்.

கே: ஒரு 70-வயதான அம்மையாருக்கு வலது கால் மட்டும் 3 மாதமாக வீக்கம் கண்டு, வடியாமல் இருக்கிறது. நீர் வடிவது நின்று, குடைச்சல் வலி நீங்க ஒரு மூலிகை சிகிச்சை கூறவும்.

ப: எழுபது வயதாகி விட்டதே! இனி என்ன மருந்து தேவை? வீக்கம் கண்டவிடத்தில் சுக்கு, நாமக்கட்டி, பெருங்காயம் உரைத்து பற்று போட்டு நெருப்பனல் காட்டினால் குடைச்சல் வலி நீங்கும்.

கே: பச்சை குத்தி ஏற்பட்டிருக்கும் அடையாளங்கள் மறைந்து போக வழி ஒன்று கூறவும்.

ப: பச்சை குத்தின அடையாளங்கள் இந்தப் பிறவியில் மாறாது. ஆமாம்! வேண்டுமானால் நவீன முறைப்படி அந்த இடத்தில் ஆபரேஷன் செய்து குடைந்து சதையை அறுத்து எறிந்து விடு. ஆனால், அதன் பிறகும் ஆபரேஷன் தழும்பு மழமழவென்று தெரியும்.

கே: எனது மனைவிக்கு 2 குழந்தைகள் உள்ளன. பிரசவக் காலங்களில் வயிற்றில் இறுக்கமாக துணி கட்டாததினால், வயிறு பருத்து தொப்பை விழுந்து விட்டது. பார்ப்பவர்களுக்கு கர்ப்பிணி போல் தோற்றம் அளிக்கிறது. அதை விலக்கி, குணமடைய ஒரு வழி கூறவும். இதனால் தொந்தரவு ஏற்படுமா?

ப: கவலை வேண்டாம்! கடுக்காய் தோலை 5 பலம் எடுத்து 1 வாளித் தண்ணீரில் போட்டு கொதிக்கக் காய்ச்சி ஆறிய பிறகு அந்த நீரிலே ஒரு மெல்லிய 2 மீட்டர் துணியை நனைத்து பாதி நீர்

பிழிந்து, பாதி நீர் அந்த துணியில் இருக்க, அந்த துணியை கர்பிணி போல இருக்கும் வயிற்றில் இரவு தோறும் கட்டி காலையில் அவிழ்த்து விட வயிறு கரைந்து விடும்.

கே: நான் தினமும் காலையில் ஒரு கைப்பிடி அளவு வல்லாரை இலையை மென்று தின்று வருகிறேன். சிலர் அத்துடன் சிறிது மிளகும் சேர்த்து தின்று வரும்படி சொல்லு கிறார்கள். இது நல்ல பலன் தருமா என்பதை தெரிவிக்கவும்.

ப: தினமும் 1 கைப்பிடி அளவு என்பது அதிகம்! வல்லாரை இலையை இடித்துப் பிழிந்து 10 துளி சாறுடன் 50 மில்லி பசும்பால் சேர்த்து குடித்து வர உடம்பு 'காய கல்பம்' ஆகும். காய கல்ப மூலிகையால் உடல், உயிர், ஆன்மா இவைகள் உரம் பெறும்



வல்லாரை



வாழை மரம்

கே: "கல்லடைப்பு" என்ற நோய் எப்படி உண்டா கிறது? இதன் அறிகுறிகள் என்ன? அந்த நோய் இருக்கிற தென்று அறிந்து கொள்ளுவது எப்படி? இதைப் போக்க மூலிகை சிகிச்சை என்ன?

ப: சிறுநீர் துவாரம் அடைபடுவதால் "மூத்திரக் கல் அடைப்பு" என்பார்கள் வாழைத்தண்டு தினமும் சாப்பாட்டில் கொள்ள இந்த மூத்திரக் கல்லடைப்பு நீங்கிவிடும்.

கே: கடுக்காயை அடிக்கடி உபயோகித்தால் ஆண்மை குறைந்து விடும் என்று சொல்லுகிறார்களே! உண்மையா?

ப: "கடுக்காயும் தாயும் கருத்திலொன்றாகும்" எனவே அது கடுக்காய் அல்ல! 'சாதிக்காய்'. எமது சாதிக்காய் கட்டுரையை நீர் வாசிக்கவில்லை போலும் அதனால் தான் கடுக்காயைப் பற்றி கேள்வி எழுப்பினீர்கள் அல்லவா?

கே: என் வயது 28. திருமணமாகி 2 குழந்தைகள் உள்ளன. கடந்த 3 மாத காலமாக எனக்கு மயக்கம் ஏற்பட்டு மலை மீது ஏறி கீழே பார்த்தால் எப்படி தோற்றம் அளிக்குமோ அப்படியும், மது அருந்தி போதையில் இருப்பவன் போலவும் இருக்கிறது. சில சமயம் நெஞ்சு, முதுகு வலி அடைப்பு உண்டாகிறது. டாக்டர், நரம்புத தளர்ச்சி, உடல் பலவீனம், B-1, B-12 ஊசிகள் 10 போட்டார். பலனில்லை. பித்தம் அதிகமாகி இருக்கிறது என்கிறார்கள். இதை போக்க, தக்க மருத்துவம் கூறி என்னை காப்பாற்றவேண்டும்.

ப: B-1, B-12, ஊசிகள் போட்டு எத்தனையோ பேர்கள் இறந்து விட்டார்கள், என்று செய்தித் தாள்கள் பறைசாற்றுகின்றன. மயக்கம் வருவது பல்வேறு காரணங்கள் உளது. இதில் நாகரீக வாழ்க்கையில், நாம் உண்ணும் உணவு, உடுக்கும் ஆடை, இருக்கும் இருப்பிடம், ஆகியவைகளாலும் இந்த மயக்கம் வரக் கூடும். இவைகளால் வரும் மயக்கத்தை மாற்றி X-ray, ரேடியம், Blood Pressher, அது! இது! என்று பரிசோதனை செய்து திசை திருப்பிவிடும் (M. B. B. S) நவீன மருத்துவர்கள் பேச்சைக் கேட்டு மயக்கத்தை அதிகப்படுத்திக் கொண்டவர்கட்கு என்ன சிகிச்சை அளிக்க முடியும்?

கே: மூல நோய்க்கு ஆபரேஷனில்லாமல் சித்த முறையில் குணப்படுத்த முடியுமா? இப்படி ஒரு வருடமாக நோய் கண்ட 30 வயதுள்ளவருக்கு மருத்துவ முறை கூறவும்.

ப: பச்சை அருகம்புல்லை வேர் இல்லாமல் நெல்லிக்காய் அளவு சாப்பிட்டபின்பு கால்படி பசும்பால் காய்ச்சி சிறிது கற்கண்டு சேர்த்து 40 நாள் குடித்துப் பின்பு எமக்கு பதில் எழுதுங்கள்.

கே: எனது நண்பருக்கு, "மொன்னை பாம்பு" கடித்து சுமார் பத்து மாதங்கள் ஆகின்றன. கடித்த உடனே, பாதங்களில் கொப்பளங்கள் ஏற்பட்டு, ஆபரேஷன் செய்து ஆறியது. அவர் உடல் நலம், பின்பு வாழ்நாளில் பாதிக்கப் படுமா? அப்படியானால், அதை தடுக்க, அவர் என்ன செய்யவேண்டும். சிகிச்சை முறை, பத்திய விவரம் கூறவும்.

ப: தூதுவளை இலைச்சாறு 10 துளிகள் விட்டு பசும்பால் 100 மில்லியுடன் கலந்து தவறாமல் 20 நாள் குடிக்க பாம்புகடி விடம் உடலை விட்டு நீங்கிப் போகும் என்பதில் ஐயமில்லை. ஆனாலும் கடுகு, எண்ணெ போன்றவைகளை நீக்கவேண்டும். (இச்சா பத்தியம்)

கே: என் மகளுக்கு வயது 27 ஆகிறது. திருமணமாகி 2 வருடம் கழிந்த பிறகு 1 ஆண் குழந்தை பிறந்தது. சைவ உணவு உட்கொள்ளும் குடும்பம். குழந்தைக்கு 40 நாட்கள் ஆகிறது. குழந்தை வலிவுள்ளதாகவும், எடையுள்ளதாகவும் இல்லை. அதிக பலவீனமுள்ளதாகவும், ஒல்லியாகவும் இருக்கிறது. தாய்ப்பால் சரியாக சாப்பிட்டு வருகிறான். மல ஜலம் சரியாகவே கழிந்து வருகிறது. தலைக்குப்படி, உடல் வலிமையும், வளர்ச்சியும் காணப்படவில்லை. இதற்கு ஒரு பலன் தரக்கூடிய மருத்துவ முறை கூறவும்.

ப: தினமும் குளிப்பாட்டும் போது மிளகு, சீரகம், வேப்பிலை அரைத்து (வேப்பங்காரம் என்பார்கள்) இதனையே கொடுத்துவர உடம்புக்குத் தேவையான சக்தியை இயற்கையாகவே தரும். வேறு ஒன்றும் தேவையில்லை. ●

மலேசியா & சிங்கப்பூரில்
"மூலிகை மணி"
பூரண விநியோக உரிமை பெற்ற விற்பனையாளர்,

ISMAIL BOOK DEPOT,
G. P. O. Box 149
SINGAPORE.

GETRICH SYNDICATE,
112, Serangoon Road,
SINGAPORE-8.

குறிப்பு:- ஆசிரியர் ஆ. இரா. கண்ணப்பர் எழுதிய மருத்துவ நூல்களும், மருந்துகளும் எங்களிடம் கிடைக்கும்.

சித்தர்கள் பற்றிய ஆய்வுத் தொடர் கட்டுரை:

நம் நாட்டுச் சித்தர்கள்!

[இரா. மாணிக்கவாசகன், எம். ஏ. எம். லிட்.]

[அகப்பேய்ச் சித்தர்] — முன் மாதத் தொடர்ச்சி

தானென்ற விடங்காட்டி நாதங்காட்டிச்
சாற்றுகிற மவுனத்தின் சார்புகாட்டி (75)

எனப் பாடுகின்றார் கைலாயக் கம்பளிச் சட்டைமுனி.

தானென்று சொன்னதென்ன என்னைப்பெற்ற
சச்சிதா னந்தவெள்ளத் தயவுள்ளாரே (129)
தானென்ற பிரமத்தை யடுத்திடாமல்
தாரணியில் தெய்வமா அனந்தமென்றும் (24)

எனச் சலித்துக்கொள்வார் காகபுசுண்டர்.

தன்னை யறியவேணும்
சாராமல் சாரவேணும் (78)

என்பது அகப்பேச் சித்தர் பாடல்.

தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமல் தானே கெடுகிறான்
தன்னை யறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே யர்ச்சக்கத் தானிருந் தானே (2315)

என்பது திருமூலரின் தெளிவான முடிவு.

எனவே சிவநிலை என்பது தன்னையறிந்து தலைப்படலாகும் என்பது தெளிவு.

இனிச் சித்தர்கள் சமுதாய மாற்றத்திற்குப் பெரிதும் தொண்டாற்றியவர்கள் என்பதறிவோம் அகப்பேய்ச் சித்தர் பாடல்களில் சில.—

சாத்திர சூத்திரமும்
சங்கற்பம் ஆனதெலாம்
பார்த்திடல் ஆகாதே
பாழ் பலங்கண்டாயே (33)
சாதி பேதமில்லை
தானாகி நின்றவர்க்கே (68)

தந்திரம் இல்லையடி
சமயம் அழிந்ததடி (71)
சாத்திரம் இல்லையடி
சலனங் கடந்ததடி (76)

இங்ஙனம் சாத்திரம், சாதி. சமயம் முதலியவற்றைப் பலமாகச் சாடியுள்ளார். இவரது பாடல்கள் அனைத்தும் தத்துவார்த்தம் நிரம்பியனவாகக் காணப்படுகின்றன.

3. 'சிவவாக்கியர்'

சித்தர் ஞானக்கோவை என்ற நூலில் சிவவாக்கியர் பாடியனவாக 526 பாடல்கள் சிவவாக்கியர் பாடல்கள் என்ற தலைப்பில் காணப்படுகின்றன. (திரு. ராமனுஜன் பதிப்பில் காணப்படும் எண்ணிக்கை இது. வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் பதிப்பில் 518 பாடல்களே காணப்படுகின்றன) இப்பாடல்களைத் தவிர இவர் சிவவாக்கியர் நாடி பரீட்சை என்ற தலைப்பில் 33 பாடல்களைக் கொண்ட நூல் இயற்றியதாக டாக்டர். சண்முகவேலன் அவர்கள் தம் நூல் ஒன்றில் குறிக்கின்றார் (p. 208 Siddhar's Science of Longevity and Kalpa Medicine of India) இவை தவிர வேறு நூல்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

இவர் தம் பாடல் தொகுப்புக்குச் 'சிவ வாக்கியம்' என்ற பெயர் சூட்டியிருத்தல் வேண்டும் என எண்ணத் தோன்றுகின்றது.

அரியதோர் நமச்சிவாயம் ஆதியந்தம் ஆனதும்
ஆறிரண்டு நூறுதேவர் அன்றுரைத்த மந்திரம்
சுரியதோர் எழுத்தை உன்னி சொல்வேன் சிவவாக்கியம்
தோஷதோஷ பாவமாயை தூரதூர ஓடவே.

எனவரும் காப்புச் செய்யுள் பாடல் நம் எண்ணத்திற்குத் துணை செய்கின்றது. சுரியது என்பது சுருங்கிய என்னும் பொருள் உடையது. (பக். 186 தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி — ச. பவானந்தம் பிள்ளை, மாக்மில்லன் அண்டு கம்பெனி, சென்னை 1932) தேவர்கள் உரைத்த குறுகிய ஓர் எழுத்தை உன்னி தோஷம், பாவம், மாயை முதலியனவற்றை அகற்றும் ஆற்றலுடைய சிவவாக்கியத்தைச் சொல்வேன் என்பது அவ்வரிகளின் கருத்து. இத்துணை தெளிவாக இப்பாடலின் தொகுப்பு சிவவாக்கியம் எனக் குறிக்கப்பட்டிருக்க, கிடைக்கின்ற சித்தர்கள் பாடல் தொகுப்புகளில் எல்லாம் சிவவாக்கியர் பாடல்கள் என்ற பெயரே காணப்படுகின்றது. இம் மாற்றம் பிற்காலத்தில் ஏற்பட்டிருக்கலாம். இவரது பாடல்களை ஊன்றிப்

படிக்கின் மிகுதியான இடைச்செருகல் உள்ளன என்பது தெளிவாகின்றது. பல பாடல்கள் இரண்டு முறை இடம் பெற்றுள்ளன. சில பாடல்களின் வரிகள் இரண்டு முறை வெவ்வேறு பாடல்களில் இடம் பெறுகின்றன. இவை இடைச் செருகலின் விளைவு. பல பாடல்கள் அந்தாதிப் போக்கில் காணப்படுகின்றன. சில பாடல்கள் முரண்பட்டுள்ளன. இவ் வந்தாதிப் பாடல்களை ஆராயின் இப்போக்கில் உள்ள பாடல்களையே இவர் இயற்றியிருத்தல் வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும். வேறு சில பாடல்களின் கருத்து, நடை, சொல்லாட்சி முதலியன முரண்பாடு உடையனவாய்க் காணப்படுகின்றன. இவையும் இடைச்செருகல் நேர்ந்துள்ளமையை விளக்கும்.

எனவே, இவர் சிவவாக்கியம் பாடியதால் சிவவாக்கியர் என்னும் பெயர் பெற்றிருத்தல் வேண்டும் எனக்கருத வேண்டியுள்ளது. ஆனால் அறிஞர் பலரும் இவர் பிறக்கும் போது 'சிவா' எனச் சொல்லிய வண்ணம் இருந்ததால் இப் பெயர் பெற்றார் எனக் கருதுகின்றனர். கீழ்க்காணும் மேற்கோள்கள் சில எடுத்துக்காட்டுகளாகும்.

சிவ வெனுஞ் சத்தத்துடனே தோன்றி ஞானநிஷ்டாபரராய் இருந்து சிவவாக்கியமெனத் தம் பெயரால் நூல் செய்தார்.

p. 223, A Tamil Dictionnary of proper names
E. Ratnavelu Mudaliar

இவர் பூமியில் பிறக்கையில் சிவ என்று சொல்லிக்கொண்டு விழுந்தபடியால் இவருக்கு இப்பெயர் இடப்பட்டது.

பக் 665 அபிதான சிந்தாமணி,
A சிங்காரவேலு முதலியா.ர்.

சிவா என்ற ஒலியுடன் நிலத்தில் பிறந்தவர்.

பக். 373, தமிழ் இலக்கிய வரலாறு,
கா. சு பிள்ளை, சென்னை 1953.

சிவசிவ என்று சொல்லிக்கொண்டு இவர் பிறந்த காரணத்தால் இவருக்குச் சிவவாக்கியர் என்று பெயரிடப்பட்டது.

பக். 143, புலவர் சரித்திர தீபம்,
J. R. ஆர்னல்டு ஜ ப்ஞ, 1886

'சிவா' எனச் சொல்லியவண்ணம் பிறந்ததால் சிவவாக்கியர் என்னும் பெயர் பெற்றார் என்பதைக் காட்டிலும், சிவவாக்கியம் பாடியதால் சிவவாக்கியர் என்னும் பெயர் பெற்றார் என்பது ஏற்றுக் கொள்ளத் தக்க கருத்தாகப் புலப்படுகின்றது. ஆசிரியரால் நூல் பெயர் பெறுவதினும் நூலால் ஆசிரியர் பெயர் பெறுவது சிறப்பாகும்.

அடுத்து வேறு ஒரு கருத்தும் கூறுதல் கூடும். குதம்பைச் சித்தர், அகப்பேய்ச் சித்தர் எனப் பாட்டின் அமைப்பை ஒட்டியும் இவர் பெயர் பெற்றிருத்தல் கூடும். இவரது பாடல்களில் சுமார் 50 இடங்களுக்கும் மேலாக 'சிவாயம்' என்னும் மந்திரத்தைப் பயன்படுத்தியுள்ளார். குறிப்பாக பல பாடல்களின் முடிவுகளில் இச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். கீழ் வரும் அடிகள் சில காட்டுகள் ஆம்.

'வெளிகடந்த தன்மையால் தெளிந்ததே சிவாயமே' -370

'பச்சைமாலும் ஈசனும் பரந்ததே சிவாயமே' -333

'மருள் அது ஏது வன்னியின் மறைந்ததே சிவாயமே' -473

எனவே மூலமந்திரத்தைப் பரவலாகக் கூறியுள்ளமையால் இவரைச் சிவவாக்கியனார் என்றனர் என்றும் கருதலாம். சித்தர்கள் குறிக்கும் சிவம் சமயம் கடந்த பேரின்பநிலை என்பதை ஈண்டு நினைவுகொள்ள வேண்டும்.

இவர் வாழ்க்கை பற்றிய அகச்சான்று அல்லது புறச்சான்று ஏதும் கிடைத்தில. வியப்புக்குரிய புரியாத புதிரான வாழ்க்கையைச் சொந்தமாக்கிக் கொண்டு வாழும் விந்தையான சித்தர்கள் தம்மைக் குறித்துக் கூறிக்கொண்டதில்லை. சிவவாக்கியர் இவ் விலக்கணத்திற்குப் புறம்பன்று. புலவர்களைப் பற்றி அறிய அவர்கள் இயற்றிய இலக்கியங்கள் ஓரளவு உதவி புரியும் என்பது உண்மையேயாகும். பகதியார்க்கம் பற்றி நிற்கும் ஞானியர் பற்றி அவர் பாடல்கள் மூலம் அறிதல் கூடுமாயினும் சித்தர்கள் பற்றி அவர் தம் பாடல்கள் மூலம் அறிய அனுவளவும் முடியா. காரணம், நாம் முன்னர் கண்டது போல அவர்கள் அனைத்திலும் புதிராகவே வாழ்ந்தவர்கள். அவர்கள் வாழ்க்கை, இலக்கியம், தத்துவம், மருத்துவம், முதலிய அனைத்துத் துறைகளிலும் புதிராகவே (mystry) காட்சியளிக்கின்றன. தோற்றத்திற்கு எளிமையான பொருள் கூறுவதாகக் காட்சியளிக்கும் சித்தர் பாடல்கள் அனைத்தும் ஆழ்ந்த உட்பொருள் உணர்த்துவதாக இருக்கும். அதன் எளிமையைக் கண்டு ஏமாறுபவர் மிகப்பலர். இதனை ஏமாற்றும் எளிமை என்ற சொல்லால் குறிக்கலாம் (Deceptive Simplicity). மேற்போக்காக நடை, சொல், பொருள் இவற்றைக் கண்டு சித்தர்களை எடைபோடுபவர்களைக் கண்டு, சித்தர் இலக்கியங்களை ஆழ்ந்து கற்றவர்கள் பெரிதும் நகைப்பர். எனவே தொட்டனைத் தூறும் மணற்கேணி போல கற்றனைத்தே சித்தர் பாடல் பொருள் விளக்கமாம் என்பது தெளிதல் வேண்டும்.

(தொடரும்)

கஞ்சா ஓர் நஞ்சு!

— P. J. ஜான், செயலாளர், சித்தர் கழகம், சென்னை.

சிவமூலி என அழைக்கப்படும் கஞ்சா செடி இந்தியா முழுவதும் தன்னிச்சையாகவும், பயிர் செய்யவும் படுகிறது இது சுமார் ஐந்து அல்லது ஆறு அடி வரை வளரும். இதற்கு ஆனந்தமூலி, கற்பமூலி, கோரக்கர்மூலி. மூதண்டம், மதமத்தகம், பங்கி போன்ற பல்வேறு பெயர்கள் உண்டு. இது கைப்புச் சுவையுடனும், வெப்பத் தன்மையுடனும், கூடிய காரப்பு வகைப் பிரிவைச் சார்ந்தது இதன் இலை, பூ, நார், விதை முதலியவைகள் பயன்தரக் கூடியவை. இம்மூலிகை வெப்பம், உறக்கம். காமம், மூர்ச்சை முதலியவற்றை உண்டாக்கவும், வாந்தி பேதி, இசிவு வலி பெரும்பாடு, சூலைகள் முதலியவற்றைப் போக்கவும், சிறுநீரைப் பெருக்கவும், மிகுந்த பசியை ஏற்படுத்தவும் செய்யும்.

சித்த மருத்துவத்தில் கஞ்சாவை அதிக அளவில் பயன்படுத்தப் படவில்லை. எனினும் இதனை இளகல் (லேகியம்) சூரணங்கள், மாத்திரைகள், தைலங்கள் முதலியவற்றிற்கு சேர்க்கப் படுகிறது. இதன் இலைச் சாற்றுல் பேன் மடியும். இதன் இலைத்தூள் இரணத்தை ஆற்றும், இதன் இலைப் பற்று கண்வலி, மூலம் முதலியவைகளுக்கு நன்மை தரும். இதன் இலைச் சாற்றுல் பாஷாண வீறு தணியும். இதன் விதையை மேகப்புண்களுக்கு உபயோகப்படுத்தப் படுகிறது. மேலும் இதன் விதையிலிருந்து வர்ணம், மெழுகு (Varnish) சோப்பு முதலியவைகள் தயாரிக்கப் படுகிறது.

கஞ்சாவை மூன்று வகையாக பிரிக்கப்படுகிறது. (1) கஞ்சா. (2) மரிஜீபனு (Marijuana), (3) சாரஸ் அல்லது ஆசீஸ் (Charas or Hashish). இதில் மிகவும் விலை உயர்ந்தது "சாரஸ்" எனும் வகையாகும் அதற்கு அடுத்த படியானது "கஞ்சா". மிகவும் மலிவானது மரிஜீபனு வகையாகும்.

கஞ்சா நன்கு பூத்துக் குலுங்கும் காலமாகிய ஐப்பசி மாதத்தில் அதன் பூவிலும், அதனைச் சார்ந்த இலைகளிலும் பிசின் போன்ற தங்க நிறமுள்ள திராவகப்பொருள் புதினு மணத்துடன் வெளிப்படும். இதனை கஞ்சாப் பால் (Cannabis) என்று கூறப்படுகிறது. இதற்கு போதையூட்டும் சக்தி அதிகம்.

ஐப்பசி மாதக் கடைசியில் இதன் இலைகளைப் பறித்து சுருட்டி சாணிக்குள் திருக்வைத்து பதனிடப்படுகிறது கஞ்சாவை கையால் பிழிந்து அத்தா தயாரிககப் படுகிறது இத தொழிலிலுள்ள நிபுணர்களால் ஒரு நாள் ஒன்றுக்கு 2 முதல் 3 தோலா அத்தர் மட்டுமே

எடுக்க இயலும். இதன் விலை மகாராஷ்டிர மாநிலத்தின் தலைநகரமான பம்பாயில் பத்தாயிரம் ரூபாயாகும். கஞ்சா பயிரிடும் தொழில் காஷ்மீர் மாநிலத்தில் அதிகளவில் நடைபெறுகிறது.

கஞ்சாவால் ஏற்படும் கெடுதிளும், பின்விளைவுகளும்

கஞ்சாவை உபயோகப் படுத்துபவர்கள் அபின் (Opium), கொக்கேன் (Cocaine) முதலியவற்றை உபயோகப் படுத்துபவர்கள் போல் தனிமையில் உபயோகப்படுத்தாமல் கூட்டமாகச் சேர்ந்து உபயோகிப்பார்கள். கஞ்சாவை புகைப்பதின் மூலம் 1 மணி நேரம் வரை போதையுணர்வும், "பங்கிசத்தி" என்ற பாகை முறையில் அருந்துவதால் மூன்று மணி நேரம் போதையும் உண்டாகும். பண்டை காலங்களில் வீரர்கள் போருக்கு போகுமுன் இதனை அருந்திச் செல்வது வழக்கம்

(1) இதனை எந்த வகையால் அருந்தினாலும் பிரமை, இல்லாத பொருள்கள் இருப்பது போன்ற எண்ணம், சொர்க்கத்தில் இருப்பது போன்ற நினைவு முதலியவற்றை செய்விக்கும்.

(2) சற்று அளவு மீறினால் முதலில் களிப்பைத் தந்து பிறகு வெறியுள்ளவனைப் போல ஆடச் செய்யும்.

(3) அளவு கடந்து உபயோகிப்பவர்களுக்கு நரம்பு பற்றிய வலிப்பு ஏற்படும்.

(4) கண் தாரை பெருகும்.

(5) துரித நாடித் துடிப்பை ஏற்படுத்தும்.

(6) ரத்த அழுத்தம் குறையும் அல்லது அதிகரிக்கும்.

(7) வரட்சி மூச்சு வாங்குதல் ஆரம்பிக்கும்.

(8) தாதுவைக் குறைத்து பேடித்தன்மையை உண்டாக்கும்

(9) கைமுஷ்டித்தனம் செய்யத் தூண்டும்.

(10) சுய உணர்வைப் போக்கி மயக்கநிலை ஏற்படுத்துவதுடன் நாளடைவில் ஆளைக் கொல்லும்.

The Fundamental Principles of KALPA

[By Dr. A. Shanmugavelan, M.A., B.O.L. Madras]

GURU MEDICINE AS KALPA

Consolidating mercury by not allowing it to pass into vapour when subjected to heat is but a difficult art. The fact as to why this process was held in secret shows that if this is successfully done, baser, metals may be converted into gold. It may be asked why Siddhar Kalpa is not popularly known to all. The answer is not far to seek. The reason may be that the art of solidifying the mercury is held as a high secret. The modern chemists consider it an absolute art for it is not known to them. In the process of genuine Kalpa, the consolidation of mercury as a fire proof metal is the most essential factor. Calcination of this fire proof metal is then carried out with the aid of Kalpa plants and super salt Muppu, a salt that withstands the action of tha fire and water.

It contains the life principle. It is free from evil purgent. Great virtue is attributed to such calcinated powder which will conquer all degenerated cancer and heart disease including coronary thrombosis and other maladies in older people and rejuvenate the entire system. The same calcinated powder is also capable of converting copper into gold. The whole secret lies in * five mystic letters and the secret is known to the Guru. Therefore, this is called 'Guru Marundu' in Tamil, (Guru Medicine). Without this Guru, there is no Kalpa. The Guru Medicine therefore, says Tirumular, is the primordial one.

According to atomic theory, the number of protons and electrons in mercury is 80. If one proton and electron is removed from mercury during the solidification process, the resulting substance is gold which is 79 in atomic number. Similarly by a

---

* சிவாயநம என்ன செப்பு பொன்னாகும். — திருமூலர்

combination of Tin and copper (29+59=79) gold may be obtained. In the metallurgical sense this is only an alloy of two metals; but in alchemical process, this is the art of making gold. In the same way Kalpa medicine prepared in alchemical process is a superior one like that of gold rather than the other ordinary medicine.

It is therefore clear that atomic theory is not modern but a very ancient concept. It was known to ancient Siddhars of Tamilnad and found elaboration in philosophic terms in the ancient Tirumular works in Tamil.

AMURI-WATER IN THE PREPARATION OF THE UNIVERSAL SALT

The role of Siddhar's 'Amuri' (water) in the preparation of 'Universal Salt' of Muppu is worth mentioning here. One may wonder how it is that mere water has such a miraculous power as to contribute in the preparation of Muppu. A bath in the waters of Cauvery, Thamparaparani, Ganges, Yamuna, Godhavari, Krishna and other holy rivers of India was regarded as a sacred religious ceremony as well as a cure for certain diseases since the great virtues of these river waters have been mentioned in the ancient religious and philosophical text books of India. Why should they have so much curative powers?

— (To be continued)

—from the book: Siddhar's Science of Longevity and Kalpa Medicine

Copies can be had from :— S. SIVABALAN, Sakthi Nilayam, 8, Umayal St., Alagappa Nagar, Madras-10

Price : Rs. 10/- including postage]

ஏஜண்டுகள் கவனத்திற்கு

பல ஏஜண்டுகள் முன்னிதழ் பாக்கிப் பணத்தை உடனடியாக அனுப்பிவைக்க கோரப்படுகிறார்கள். பழைய பாக்கியை அனுப்பவில்லையானால், புதிய இதழ்கள் கண்டிப்பாக அனுப்ப இயலாது.

உ
முருகா.

நோய்களின் பெயர் அகராதி!

அறிவியலின் வேகமான வளர்ச்சி, தமிழ் மருத்துவத்தையும் தாக்கியுள்ளமையை இன்று கல்வியறிவில்லாத மக்கள் கூட, மருத்துவரிடம் சென்று,

“சார்! நேத்தெல்லாம் ஒரே பீவர்; ஜாயிண்டெல்லாம் ஒரே வலி; ப்ளு சுரம் மாதிரி இருக்குது; ஸ்ட்ரெப்டோமைசின் இஞ்செக்ஷன் ஒண்ணு போடுங்கோ சார்!” என்று நோயைப் பற்றியும் — அதற்குரிய மருந்தைப் பற்றியும், மருத்துவருக்கே அறிவிக்கும் அளவிற்கு முன்னேறியுள்ளது.

ஆனால், தமிழ் மருத்துவம் — அந்த தாக்குதல்களைச் சமாளித்து வாழ்வதற்குக் காரணம், சித்தர்களின் மெய்ஞ்ஞான அறிவில் பிறந்து வளர்ந்ததே யாகும்.

இன்றளவும் நம்மிடையே ஆராய்ச்சிபூர்வமாக கண்டுபிடிக்கப்பட்டு பல ஆங்கிலப் பெயர்களுடன் வாழ்ந்து நம்மை வலம் வரும் பல்வேறு நோய்களைப் பற்றி, நம் சித்தர் நூல்கள் குறிப்பிட்டுள்ளன. நோய்கள் பற்றிய பெயர் அகராதி (ஆங்கிலம் – தமிழ்) இக்கருத்தினை நன்கு விளக்கும். வாசக அன்பர்கள் கருத்தூன்றி இப் பகுதியினைப் படித்தால், தமிழ் மருத்துவத்தின் தொன்மையும், எக்காலத்திற்கும் ஏற்றவாறு அமையும் அதன் தன்மையும் விளங்கும்.

ஆங்கிலம் :		தமிழ் :
Abortion (அபார்ஷன்)	—	கருச்சிதைவு; அழி கர்ப்பம்; கர்ப்பம் கரைந்து போகுதல்
Abscess (ஆப்ஸஸ்)	—	விப்புருதி கட்டி, சீழ்கொண்ட கட்டி
Abse Psoanus (ஆப்ஸ்க் சோனஸ்)	—	வயிற்றில் தோன்றும் விப்புருதி கட்டி
Acholia (அகோலியா)	—	பித்தநீர்க் குறைவு; உடல் இளைத்தல்

Acinesia (அசினீசியா) — திமிர்வாதநோய்; பெரும்பாலும் கை கால்களில் வரும்.

Acne or copper nose (ஏகன்) — முகப்பரு

Actinomycosis (ஆக்டிநோமிகோசுஸ்) — தோலின் மேல் காளான் போன்று கட்டிகள் உண்டாகும் நோய்

Adenitis (அடினிடிஸ்) — பேறு காலத்தில் அதிகமாக நடப்பதால், தோலின் மேல் வரும் புண் பேறு காலத்தில் பெண்களின் தொடையில் தோன்றும் வீக்கம்.

Adenoma (அடிநோமா) — மார்புச் சிலந்தி

Agalactia (அகாலக்டியா) — குழவி ஈன்ற பெண்களுக்கு பால் வற்றிப் போதல்

Ague (ஏச்) — குளிர் காய்ச்சல்

Ague cake (ஏக் கேக்) — காய்ச்சலுடன் கூடிய கட்டி

Albinism-white skin (அலபீனிசம்-ஒயிட்ஸ்கின்) — மூத்திரக் குண்டிக்காயில் வரும் நோய்; மூத்திர குண்டிக்காயில் அழற்படுதல். இரத்தத்தில் இருக்கும் சத்து. மூத்திரக் குண்டிக்காய் மூலமாய் சிறுநீராக வெளிப்படுவதால் உண்டாகும் பாண்டு நோய்.

Alcohalism (ஆல்காஹலிசம்) — சாராயத்தை அதிகமாக அருந்துவதால் உண்டாகும் சந்நி நோய்

Alopecia (அலோபீஷியா) — மயிர் உதிரல்

Amaurosis (அமாரோசஸ்) — கண் புகைச்சல்; கண் சுழற்சி

Amblyopia (அம்பிளியோபியா) — மந்தப் பார்வை; பார்வை மங்கல்

Ambustio (அம்டஸ்டியோ) — தீப்புண்; நெருப்பால் உண்டாகும் புண்

Amenorrhoea (அமனோரியா) — சூதகக் கட்டு; மசக்கை இரத்த குன்ம நோய்

Amnesia (அம்நீஷியா) — நினைவு மறதி; நினைவு அழிதல்

Amyloid (அமிலாய்ட்) — சிறுநீரகம் அழற்படுதல்

Anasarca (அனுஸர்கா) — நீர்க்கோவை, நீரேற்றம்

Anaemia (அநீமியா) — பாண்டுநோய், இரத்தக் குறைவால் வருவது

Anaesthesia (அநாஸ்தீஸியா) — திமிர்வாத நோய்

Aneurisma (அநியூரிஸ்மா) — நரப்பு விப்புருதி

Angeileucitis (அங்குலூஸிடிஸ்) — நிணநரம்பில் அழற்படுதல்

Angina Pectories (அஞ்சினு பெக்டோரீஸ்) — மாரடைப்பு, தமரக வாதம்

Anidrosis (அனிட்ரோசிஸ்) — வியர்வை வெளியேறாத நோய்

Anorexia (அனோரக்ஸியா) — அரோசிகம்; பசியின்மை

Anthrax (ஆந்தராக்ஸ்) — மேகக் கட்டி, ராஜப் பிளவை

Anus Fissure (ஆநஸ் பிஷ்ஷர்) — ஆசனவாய் வெடிப்பு

Anus Fistula (ஆநஸ் பிஸ்டுலா) — பௌத்திரம்

Aorta Aneurism (அயோர்டா அநியூரிசம்) — நரம்பின் மேல் காணும் இரத்தக் கட்டி

Aphasia (அபேசியா) — கோழை அடைப்பு இந்த நோய் உள்ளவர்கட்கு சரிவர பேச இயலாது

Aphonia (அபோனியா) — குரல் கம்மல்; தொண்டைக் கம்மல்; கீச்சுக் குரல்

(தொடரும்)

வாங்கிப் படித்துப் பயனடையுங்கள்:

"சக்தி தரும் சஞ்சீவி மூலிகைகள்"

[விலை 50-காசு]

சர்க்கரை நோய் தீர

'ஆவாரை' சுவைநீர்!

'ஆவாரைப் பூத்திருக்கச் சாவாரைக் கண்டதுண்டோ'

என்பது மருத்துவப் பழமொழி.

சர்க்கரை நோயுள்ளவர்களுக்கு ஆவாரை ஓர் அற்புத மருந்தாகும். எளிய மருத்துவ முறையை நம் நாட்டவர்கள் ஆவாரை மூலம் அளித்து, சர்க்கரை நோயினின்று விடுதலைப் பெற்றுள்ளனர். முயற்சியும், நம்பிக்கையும் தான் தேவை.

ஆவாரையைப் பற்றி ஆங்கில மருத்துவ அகராதி கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகிறது. Cassia Auriculata — (ஆவாரை) Action and use :—Astringent, Laxative, the seeds in opthalmia, The decoction of the bark as gargle and enema.

சர்க்கரை நோய் தீர

ஆவாரையின் பூ, இலை, காய்ப்பு ஆகிய மூன்றினையும் கொண்டு வந்து நிழலில் உலர்த்தி இடித்துத் தூள் செய்து வைத்துக் கொள்ளவும். நாள் தோறும் காபி டீ ஆகிய வற்றிற்குப் பதிலாக இந்த ஆவாரைப்பொடியை இரண்டு தேக்கரண்டி (டீ ஸ்பூன்) அளவு சுடுநீரிலிட்டு கொதிக்க வைத்து குடிநீராக்கி, அத்துடன் போதிய அளவு பனங் கற்கண்டு, வால்மிளகு, ஏலக்காய் ஆகியன போட்டுப் பின் பால் கலந்து, சுவை நீராக்கி அருந்தவும்.

இதனால் ஏற்படும் பலன்

இதனால் ஏற்படும் முதல் பயன், சர்க்கரை நோய் தீரும். அதிமூத்திரம் சீர்படும். துரிதமாக ஏற்படும் விந்து வெளியேற்றம் கட்டுப்படும். 20 (அ) 40 நாட்கள் தொடர்ந்து நாள்தோறும் காலை வேளை மட்டும் செய்து வரல் வேண்டும்.

இதனை மேற்கொள்ளும் போது தள்ளவேண்டியவை :— காபி, டீ, புகையிலை, போகம், மாமிசம், இரவில் கண்விழிப்பு ஆகியனவாகும். இங்ஙனம் 20 முதல் 40 நாட்கள் தொடர்ந்து இம்மாதிரி செய்துவர சர்க்கரை நோய் அறவே ஒழியும்.

ஓயாமல் ஊசி குத்திக் கொள்வதை விட

'ஆவாரை சுவைநீரை'ப் பருகிப் பாருங்கள்

நிச்சயம் குணம் கிடைக்கும்!

சந்தா அன்பர்களுக்கு மட்டும்

எமது தயாரிப்புகள் :

கற்பக மிளகுப் பொடி

குழந்தைகளுக்கு வரும் எவ்விதமான நோய்களுக்கும் குறிப்பாக மாந்தை, இழுப்பு, இளைப்பு, இருமல், கபக்காய்ச்சல்களுக்கு ஏற்றது.

ஒரு பாக்கெட் விலை ரூ. 2—00

முக்கூட்டு கற்ப மூலிகைத் தைலம்

எண்ணெய் ஸ்நானத்திற்கு ஏற்றது. தேக வலிமையும் உண்டாக்கி உடல் சூட்டைத் தணித்து ஆரோக்கியத்தைத் தரும்.

ஒரு புட்டி விலை ரூ. 4—00

மருதோன்றித் தைலம்

தலைமுடி கொட்டுபவர்களுக்கு ஏற்றது. தலைமுடி கொட்டுவதை நிறுத்துவதுடன் கருமையாக தலைமுடியை வளர வைக்கும்.

ஒரு புட்டி விலை ரூ. 4—00

மூலிகை பேதி மாத்திரை

மலச்சிக்கல், மலப்புழு உள்ளவர்கள் மாதம் 1 முறை சாப்பிடலாம் குழந்தை முதல் பெரியோர் வரை பயமின்றிச் சாப்பிடலாம்.

25 மாத்திரை விலை ரூ. 2—50

வல்லாரைத் தைலம்

மண்டை வறட்சி, ஞாபகமறதி, வழுக்கைத்தலை, அதிகஉஷ்ணம், பித்தம் ஆகியவை நீங்கி தேகம் குளிர்ச்சியாகும்.

ஒரு புட்டி விலை ரூ. 4—00

முசுமுசுக்கை தைலம்

தலைக்கு தடவிவர சகல உஷ்ணமும் நீங்கும். பீனிச நோய், அகாலரோமம் உதிர்தல், ஆஸ்துமா, காசநோயுடையவர்களுக்கு ஏற்றது

ஒரு புட்டி விலை ரூ. 4—00

கருவேலன்பட்டை பற்பொடி

தினசரி உபயோகத்திற்காகவும் பல்லுறுதிக்கும், பல்தூய்மைக்கும் சிறந்தது கருவேலன்பட்டை பற்பொடி.

ஒரு பாக்கெட் விலை 0—30 காசு.

காது நோய் எண்ணை

காதில் சீழ்வடிதல், இரத்தம் வருதல், காதுவலி, வீக்கம் ஆகியவைகளுக்கு சிறந்த மூலிகைகளால் தயாரித்தது.

ஒரு புட்டி விலை ரூ. 2—00

வல்லாரைத் திப்பிலி

பள்ளி செல்லும் இளம் மாணவ மாணவியர்களின் ஞாபக மறதி நீங்கி, கவனமாய்ப் படித்து தேர்வு எழுதி முதன்மையாக தேறலாம்.

40-நாள் மருந்து பாக்கெட் விலை ரூ. 3-50

நேத்திரப் பூண்டு தைலம்

96-வித கண் கோளாறுகளுக்கும் (பார்வை மங்கல், சதை வளர்தல், சாளேச்ரம்) சிறுவர் முதல் பெரியோர் வரை உபயோகிக்கலாம்.

ஒரு புட்டி விலை ரூ. 7-50

மகா மூலிகை எண்ணெய்

காலில் ஆணி, தோலைப் பற்றிய நோய்கள், வெண்குட்டம், உடலில் அசுத்த நீர் தேக்கம், ஊளைச்சதை, சர்மநோய்கள் தீரும்.

ஒரு புட்டி விலை ரூ. 25-00

தலைவலி மாத்திரை

எந்தவிதமான தலைவலி வந்தபோதிலும் ஒரு மாத்திரையை சுடு நீரில் உரைத்து தலைக்குப் பற்று போட்டுவிட வலியெல்லாம் குறைந்து நீர்குற்றம் முதல் எல்லா வலிகளையும் அறவே போக்கும். சித்தர் இலகு மருத்துவத்தில் இம்முறை கூறப்பட்டுள்ளது.

25 மாத்திரை விலை ரூ. 2-50

பொன்னாங்கண்ணி தைலம்

அசல் பொன்னாங்கண்ணி கீரையால் முறைப்படி தயாரித்தது. கண் ஒளிக்கும் பார்வைக்கும் சிறந்தது. தலைக்கு ஸ்னாமாகவும், தினம் தடவிக்கொள்ளவும் ஏற்றது. 1 புட்டி விலை ரூ. 4-00

தாளிச கலவைப் பொடி

பழங்கால முறைப்படி தயாரித்தது. சாதாரண காய்ச்சல் முதல் எந்தவிதமான நோய்களுக்கும், குழந்தை முதல் பெரியோர் வரையில் தேன், நெய், வெண்ணை, வெந்நீர் போன்ற அனுபானங்களில் கலந்து பயன்படுத்தலாம். 1 பாக்கெட் விலை ரூ. 3-00

தேவையான மருந்தைக் குறிப்பிட்டு இத்துடன் தபால் சிலவு ரூ. 2—05 சேர்த்து கீழ்கண்ட முகவரிக்கு மணியாடர் செய்தால் உடன் பார்சல் மூலம் வரிசைக் கிரமமாக அனுப்பி வைக்கப்படும்.

மருந்துகள் ஒன்றுக்கு மேல் 2 (அ) 3 புட்டிகளுக்கு ரூ. 3-05ம் 4 (அ) 5-புட்டிகளுக்கு ரூ. 4-05ம் தபால்சிலவு சேர்த்து அனுப்பவும்.

மணியார்டர் கூப்பனில் தெளிவான விலாசமும், தேவையான மருந்துகளும் விபரமாக எழுதாவிடில் கவனிக்க இயலாது.

முகவரி :— ஆ. இரா. கண்ணப்பர், R. M. P.

59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1 (வ. ஆ.)

உ

ஆஸ்துமாவை அகற்றுங்கள்!

[புலவர், தே ப. சின்னசாமி, முத்துகாபட்டி]

ஆஸ்துமா (ASTHMA) என்ற மூச்சுத்திணால் நோய் பெரிதும் பரவியுள்ள நோய்களில் ஒன்று. இதனை வடமொழியில் சுவாசகாசம் என்கின்றனர். தமிழில் மூச்சுத்திணால், இழுப்பு என்று சொல்லுகின்றோம். ஈளை நோய் என்ற க்ஷய ரோகம் (TUBERCULOSIS) வேறு — ஆஸ்துமா வேறு. சிலர் இந்த இரண்டையும் ஒன்றாக்கி குழப்பஞ் செய்கின்றனர் இரு நோய்களிலும் உள்ள இருமல் முதலான நோய்க் குறிகள் ஒத்திருப்பதாலேயே அந்த குழப்பம் ஏற்படுகிறது. இவை இரண்டும் வேறு வேறானவை என்பதை முதலில் உணரவேண்டும்.

க்ஷயரோகத்தை — (Tuberculosis) Consumption or Phthisis என்கின்றனர். நுரையீரல் வீக்கம Pleurisy, மார்ச்சளி Bronchitis ஆகியவை யெல்லாம் ஆஸ்துமாவிலிருந்து வேறுபட்டவைகள். அவைகளைப் பற்றி பிரிதொரு கட்டுரையில் எழுதலாம்.

ஆஸ்துமா என்பது என்ன?

நமது உடம்பிற்கு உணவு, நீர் போல் காற்றும் மிக இன்றியமையாததாகும். இக் காற்றை நமது உடலோடு ஒன்ற வைப்பது நுரையீரலாகும். இந்த நுரையீரலில் உள்ள காற்று அறைகள் — கண்ணறைகள் தான் உயிர்க் காற்றை குருதியோடு கலந்து தூய்மை செய்வதோடு வெப்பத்தையும் உண்டாக்குகின்றன. காற்றும் குருதி எரிக்கப்பட்டுத் தூய்மையாகின்றது. இக் கண்ணறைகளில் உள்ள உணர்ச்சி நரம்புகள் சுருங்குவதால் கண்ணறைகள் சுருங்குகின்றன. அவ்வாறு சுருங்கி வருவதால் போதிய அளவு காற்றை உட்கொள்ள இயலாது. ஆகவே மூச்சுத்திணறல் — ஆஸ்துமா ஏற்படுகிறது. மூச்சுக் குழல்களில் உள்ள கோழைப் படலத் திசுக்கள் சுருங்கியும் நுரையீரலுக்குக் காற்றுச் செல்வதைத் தடைப்படுத்தும். இதனாலும் ஆஸ்துமா ஏற்படும். இவ்வாறு நுரையீரல் காற்றறைகள் சுருங்கி மூச்சுத்திணறல்—இழுப்பு வருவதையே நாம் ஆஸ்துமா (Asthma) என்கின்றோம்.

நோய்க் குறி

தொண்டையில் தினவு, மூட்சொருகல் போன்ற வலி. இருமல், உடல் வலி ஆகியவை ஆஸ்துமா தோன்றுவதற்கு அறிகுறியாகும். குரல் கம்மல், செரியாமை, விலாவலி, முதுகுத் தண்டு அழற்சி, மார்பில் பளு, கர்முர் ஒலி, இசிவு, நாடி மெலிவு, கண் நிலைகுத்தல், வியர்வை, முகவாட்டம், உடல் வற்றல், கடுத்தல், முறுக்கல், வெதும்பல், தலைவலி, மயக்கம், தூக்கமின்மை வாந்தி, பொருமல். இரவில் 2, 3-மணிக்கு மேல் மூச்சடைப்பு, இழுப்பு இருமல், கோழை வெளிப்பட்டதும் அமைதியாதல் ஆகிய குணங்கள் இருக்கும். மரணத் துன்பம், உயிர் போய்விடுமோ என்ற அச்சம்! ஆனால் போகாது. இது தான் இந்த நோயின் தலையான குணம். நரக வேதனை! சிறுநீர் மஞ்சளாதலும், மலங் கறுத்தலும் உண்டு.

12-வகை

ஆஸ்துமா தொன்று தொட்டு வரும் நோய். இதனைத் தமிழ் வல்லுநர்கள் 12-வகையாக வகுத்துள்ளனர். மந்தாரகாசம், பட்ச மந்தாரகாசம், சுடர்காசம், பித்தகாசம், சுவாசகாசம், இரத்தகாசம், பீனிசகாசம் ஆகிய ஏழும் குணமாவன. வாதகாசம், சிலேத்தும காசம், தொந்தகாசம் ஆகிய மூன்றும் குணமாகாதன. வாதபித்த காசம், பித்த சிலேத்துமகாசம் ஆகிய இரண்டும் தொடக்கத்தில் மருத்துவம் பார்த்தால் குணமாகிவிடும். வாதகாசத்தில் நெஞ்சுத் தினவு, செவி இரைச்சல், கீழ்மூச்சு, கோழை, இருமல் இருக்கும். பித்தகாசத்தில் இருமல், வயிறு புரட்டல், வாந்தி இரத்தம் வருதல், உடல் இளைப்பு, மயிர்க்கூச்சம், சுரம், மனக்கலக்கம் இருக்கும். சிலேத்தும காசத்தில் ஈளை, இருமல், மேல்மூச்சு, வாந்தி, சித்தம் கலங்கல் இருக்கும். பிறவற்றின் குறிகளை மேலே தொகுத்துச் சொல்லப்பட்டதால் ஈண்டு குறிப்பிட வேண்டுவதில்லை. ஆங்கில மருத்துவத்தில் Asthma, Esinophilia, Aminophilia, Cortasthma என வகுத்துள்ளனர்.

இந் நோய் எதனால் வருகின்றது?

இத்தகு கொடுநோய் எதனால் வருகிறது என்பதை அறிதல் நன்று. நாம் சரிவரக் காற்றை உட்கொள்ளாமையே முதற் காரணமும், முக்கிய காரணமும் ஆகும். அதிக அளவு உணவை உட்கொண்டு சோற்றால் அடித்த பிண்டமாக இருக்க விழைகின்றவர்கள் அதிக அளவு காற்றை — ஏன் போதிய அளவு காற்றைக் கூட

உள் வாங்குவதில்லையே! நிமிர்ந்து உட்காராமல், நடக்காமல் கூன் போட்டு, மார்பை மடிப்புடையதாக்கி இருப்பதாலேயே நுரையீரலில் மடிப்புகள் ஏற்பட்டுக் காற்று அறைகள் சுருங்கி ஆஸ்துமாவை உண்டாக்குகின்றது. பூனை எலி கடித்து விட்டால் ஒன்றும் செய்யாது என்று அலட்சியப்படுத்தி விடுகின்றோம். அதே பிற்காலத்தில் ஆஸ்துமாவை உண்டாக்குகின்றது. தெருப்புழுதி, வீடு கூட்டும் புழுதி, பல்வேறு வகையான புகை, பஞ்சாலையில் எழும் தூசுகள், பூவின் மகரந்தங்கள், மயக்கம் தரும் மிகுந்த மணம் ஆகியவைகளும் நுரையீரல் கண்ணறைகளைச் சுருங்க வைத்து ஆஸ்துமாவை உண்டாக்கும். குளிர்ந்த நீரை அதிகம் அருந்துதல், ஈரக் கசிவான இடத்தில் வாழ்தல், பனியில் அலைதல், மிகுபோகம் ஆகியவற்றாலும் ஆஸ்துமா பிறக்கின்றது சத்தற்ற உணவினை உண்பதும், உடல் உழைப்பின்மையும் கூட ஆஸ்துமாவை தோற்றுவிக்கலாம்.

ஆஸ்துமாவும் ஆங்கில மருத்துவமும்

“ஆஸ்துமாவை குணமாக்கும் மருந்து கிடையாது. அதன் துன்பத்தை மட்டுமே குறைக்கலாம்” என்று M. D. படித்த டாக்டர் ஒருவர் ‘நல்வழி’ பத்திரிகையில் கூறியுள்ளார். அது முற்றிலும் உண்மை தான்! இருந்தாலும் ஆங்கில மருத்துவம் செய்யும் டாக்டர்கள் நோயாளிகளை விடுவதில்லையே! நோயாளிகளும் விடுபடுவதில்லையே! என் செய்வது?

அவர்கள் Phenergan, Aminophilline என்ற மருந்துகளைக் கொடுக்கின்றனர். கடுமையானபோது Neo Epinine என்ற மருந்தை கொடுக்கின்றனர். Adrenalin என்ற ஊசிமருந்தை ஆண்டு கணக்கில் போடுகின்றனர். மேலும் Ephedrex, Histapred, Hetrazan, Tedralsa, Cortasthma Indon முதலான வியாபாரக் கம்பெனிகளின் (நோயைக் குணமாக்க அல்ல) மாத்திரைகளை மாதக் கணக்கில், ஆண்டுக் கணக்கில் சாப்பிடச் சொல்லுகின்றனர். அத்துடன் விட்டார்கள்! இரத்தப் பரிசோதனை, எக்ஸ்ரே, என்றவாறு தொடர்ந்து அறுக்கவும் செய்கின்றனர். அந்தப் புதிய அறுவைக்குப் பெயர் கிளோமெக்டமி (Glomectomy). 2000 ஊசிகள் போட்டும் குணமாகாத குணமாக்காத டாக்டரிடம் ஓடுகின்ற மக்களின் நிலைதான் என்ன? அந்தோ பரிதாபம்!

இப்படிப்பட்ட ஆங்கில மருந்துகளால் நோய் குணமாகாதது இருக்கட்டும். அதன் விளைவுகள் :— உடல் சக்தி முழுதும் இழந்து, சதை மெலிந்து, எலும்புந் தோலுமாய், கடுமையான மலச்சிக்கலுக்கு

ஆளாகி, கல்லீரல், குருதி, சிறுநீர் பிரிதி கெட்டு, மருந்தால் அடித்த பிண்டமாகி நரகத்தை இங்கேயே அனுபவித்துச் சாகின்றவர்களை எண்ணி இரங்குவது தவிர வேறென்ன செய்வது? இக் கொடுமையறிந்தாகிலும் ஆஸ்துமாவுக்கு ஆங்கில மருத்துவத்தை அகற்றி நிரந்தர குணமளிக்கும் தமிழ் மருத்துவத்தை நாடவேண்டுகின்றேன். இக் கட்டுரையைப் படிக்கும் அன்பர்கள் தங்கள் நண்பர்களுக்கும், தங்களைச் சார்ந்தவர்களுக்கும் இதன் உண்மையைக் கூறவேண்டும் என வேண்டுகின்றேன்.

ஆஸ்துமாவை அகற்றுங்கள்

ஆஸ்துமாவைத் தமிழ் மருந்துகளால் அகற்றுங்கள்! நிலைத்த குணமளிக்கும் நல்ல மருந்துகள் இருக்கின்றன. தாளக பற்பம், மால் தேவிச் செந்தூரம், ப[illegible]க்கற் செந்தூரம், தூதுளை, ஆடாதொடை, கண்டங்கத்திரி ஆகியவைகளின் கிருதங்கள், சித்திரமூலச் சூரணம், அரக்குத்தைலக் குளியல் ஆகியவை நல்ல மருந்துகளாகும். நல்ல தமிழ் மருத்துவர்களை நாடி இம் மருந்துகளைப் பெற்று ஆஸ்துமாவை அகற்றுங்கள்.

ஆஸ்துமா வராமலிருக்க

ஆஸ்துமா மிகக் கொடுமையான நோய்களில் ஒன்று. வந்த பின் மருத்துவத்தைத் தேடுவதைக் காட்டிலும், வராமல் தடுப்பது நல்லது. அதற்குச் சில வழிகள் ஈண்டு கூறப்படும்.

நடக்கும் போதும், உட்கார்ந்திருக்கும் போதும் நிமிர்ந்தே இருக்க வேண்டும். மார்பினைச் சுருக்கி வைத்துக் கொள்ளக்கூடாது. எப்பொழுதும் நன்றாக ஆழ்ந்து மூச்சு வாங்கவேண்டும். நாம் உள் இழுக்கும் காற்று ஒவ்வொரு முறையும் நுரையீரலை நிரப்புமாறு செய்ய வேண்டும். காலை, மாலை மூச்சுப் பயிற்சி பிராணாயமம் செய்வது நல்லது. இந்த அரிய மூச்சுப் பயிற்சியால் ஆஸ்துமா வராமலும் தடுக்கலாம். வந்த பின் எந்த மருத்துவமும் நாடாமல் மூச்சுப் பயிற்சி ஒன்றையே தவறாது மேற்கொள்ளுவதால் நோயைக் குணமாக்கலாம். தொடக்க நிலையில் இப் பயிற்சி உறுதியாகக் குணமளிக்கும். பல யோகாசனப் பயிற்சியாளர்கள் இப் பயிற்சி மூலம் பலரது நோயைக் குணமாக்கியுள்ளனர். கிழமை தோறும் மலையேறும் பயிற்சி, நீந்தும் பயிற்சி, உடற்பயிற்சி வகுப்பில் மார்பு விரியச் சொல்லிக் கொடுக்கும் பயிற்சி ஆகியவைகளை மேற்கொண்டால் ஆஸ்துமா நோய் மருந்தின்றியே குணமாகும்.

ஆஸ்துமா வராமல் தடுக்க நினைப்பவர்கள் அதிகமாக குளிர்ந்த நீரை அருந்தக் கூடாது. பூவின் மகரந்தங்கள் மூக்கில் செல்லுமாறு மூச்சு இழுக்கக் கூடாது. பூவினை மூக்கின் அருகில் வைத்து நுகரக் கூடாது. வீடு கூட்டும் புழுதி, ஆலைகளில், மோட்டார்களில் வரும் புகை, துகள் மூக்கில் செல்லாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அதிக மணமுள்ளப் (ஊதுவத்தி) பொருள்களைத் தொடர்ந்து நுகரக் கூடாது. ஈரக்கசிவுள்ள சுற்றுப்புறம், பனியில் திறந்த மார்போடு சுற்றுதலும் ஆஸ்துமாவுக்குக் காரணமாகும்.

கீரைகள், பழங்கள் உணவில் சேரவேண்டும். உழைப்பு இல்லாதவர்கள் உடற்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். பசையுள்ள மாவுப் பொருள்கள், புழுதி புகை நுரையீரலை அண்டாதவாறு காத்துக் கொள்ள வேண்டும். பீடி, சிகரெட் புகை ஆஸ்துமாவையும் உண்டாக்கும். க்ஷயரோகத்தையும் உண்டாக்கும். எனவே, அதனை அறவே அகற்றுதல் அறிவுடைமையாகும். பூனை, எலி கடிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கடித்தால் உடனே மருத்துவம் செய்து கொள்ள வேண்டும். ஆஸ்துமா வராமல் தடுக்கலாம். வந்த ஆஸ்துமாவை அகற்றுங்கள்! நல்ல மூச்சுப் பயிற்சி (சுவாசம்) ஆஸ்துமாவை அண்டவிடாது.

நிறைய காற்றை உட்கொள்ளுங்கள்!

அது உடலையும் காக்கும்! உயிரையும் நிலைக்க வைக்கும்!!

● ● ●

96-வித கண் கோளாறுகளுக்கு

நேத்திரப் பூண்டு தைலம்

நேத்திரப் பூண்டு என்ற மூலிகை தைலம் எல்லாவித கண் கோளாறுகளுக்கும் கைகண்ட பரம்பரை அனுபவமுறை! இதை ஆசிரியர் கண்ணப்பர் அவர்கள் முறையாக எடுத்து தைலமாகச் செய்து அண்மையில் வாசக சந்தா அன்பர்கட்கு மட்டும் கொடுக்க முன்வந்துள்ளார்.

நேத்திரப் பூண்டு தைலம் வேண்டுவோர் தபால் செலவு ரூ. 2—50 ம், தைல விலை ரூ. 7—50 ம் ஆக ரூ. 10—00 M. O. அனுப்பி பெறலாம். பணம் அனுப்பும்போது தவறுமல் சந்தா எண்ணைக் குறிப்பிடல் வேண்டும்.

□ சந்தாதார் அல்லாதார் ரூ. 16—00 M. O. செய்யவேண்டும்

மூலிகை அகராதி

— முன் மாதத் தொடர்ச்சி

பருப்புக் கீரை

வேறு பெயர்கள் : வயலைக்கீரை, கோலிகீரை, பசலைக்கீரை, ஆங்கிலம் : இன்டியன் பர்சிலேன், தெலுங்கு : பப்புகூரா, மலையாளம் : கோரிசீர்ரா, கன்னடம் : தூதகோரை, சமஸ்கிருதம் : லோனி, இந்தி : குர்ஷா.

விபரம்

பருப்புடன் சேர்த்து உணவில் கொள்ளுவதால் நமது நாட்டினர் இதற்கு பருப்புச்கீரை என்றே பெயரிட்டுள்ளனர். இந்தியாவில் எங்கும் கீரையினமாகப் பயிரிட்டு, தினமும் உணவுடன் சேர்த்து இயற்கையாக உடலுக்கு நல்ல சக்தியை பெறுகின்றனர். நீர்நிலைகளில் இது தானுகவே வளரும்.

உபயோக உறுப்பு—இலை, விதை, சமூலம்

சுவை : இனிப்பு, புளிப்பு, வீர்யம் : சீதம், பிரிவு : இனிப்பு.

குணநிசயம்

குளிர்ச்சியுண்டாக்கி, சிறுநீர்ப்பெருக்கி, உள்ளழலாற்றி சிறு துவர்ப்பி, வரட்சியகற்றி, பித்தமகற்றி.

பறட்டைக் கீரை

வேறு பெயர்கள் : பறட்டகீரை, பிரட்டகீரை, ஆங்கிலம் : ஜஸ்டிசிகா மதுரென்சஸ்.

விபரம்

தென்னிந்தியாவுக்கே உரிய கீரையினமாகும். புளியிட்டு கிராம மக்கள் இதனை கடையல் செய்து சாப்பிட்டு வருவது வழக்கம்.

சுவை : சிறு கைப்பு, இனிப்பு, வீர்யம் : வெப்பம், பிரிவு : கார்ப்பு.

குணதிசயம்

மலமிளக்கி, வாதப்பிணி விலக்கி, குளிர்ச்சிப் போக்கி.

பாற் சோரிக் கீரை

வேறு பெயர்கள் : பாற்சொற்றிக் கீரை, பிடில் இலை, பால் சொற்றிக் கீரை, பாச்சோத்திக் கீரை, பெற்றிக் கீரை, ஆங்கிலம் : குல்லியா செகுண்டா.

விபரம்

பால் சுரக்கும் இந்தக் கீரையினத்தையும் தமிழகத்தின் உணவாகச் சேர்க்கின்றனர். இதும் ஓர் கீரையினமாகும்.

உபயோக உறுப்பு—இலை மட்டும்

சுவை : இனிப்பு, வீர்யம் : சீதம், பிரிவு : இனிப்பு

குணதிசயம்

மலமிளக்கி, துவர்ப்பி, உரமாக்கி, குளிர்ச்சியுண்டாக்கி, நச்சரி, நுட்புழுக்கொல்லி, தாகமடங்கி, குட்டநோய் போக்கி.

பிண்ணாக்கு கீரை

வேறு பெயர் : புண்ணாக்கு கீரை, ஆங்கிலம் : மெலோசியா கார்ச்சோரி போலியா.

விபரம்

இதுவும் தென்னிந்தியா, இலங்கையிலும் தன்னிச்சை யாக பயிராகிறது. மேகப்பிணி உடையவர்களும், பிரமேக வெள்ளை ஒழுக்கு உடையவர்களும் இதனை நிறைய உணவில் சேர்த்து வருவார்கள்.

உபயோக உறுப்பு—கீரை மட்டும்

சுவை : இனிப்பு, வீர்யம் : சீதம், பிரிவு : இனிப்பு.

குணதிசயம்

மலமிளக்கி, சிறுநீர் பெருக்கி, நுட்புழுக்கொல்லி, மேகப் பிணி விலக்கி.

(தொடரும்)

காய்ச்சல், முறைக்காய்ச்சல், சன்னிக் காய்ச்சல்!

— சித்த விஞ்ஞானி, பண்டித. கி. ராமய்யா, நாங்குனேரி.

காய்ச்சல் என்றாலே சிலேத்தும நாடி தொட்ட நோய் தான். தற்கால நவீனத்தில் கையாளுகிறபடி, இரத்தத்தில் ஊசி மருந்து அளித்தால் ஒரு சிலருக்கு நரம்பு பலத்தாலும், இரத்தப் புஷ்டியாலும் ஊசியின் பாஷாணப் பெருக்கால் சுகத்துக்கு வரலாம். ஆனால் பலவீனமுள்ள உடலுக்குக் கொஞ்சமும் குணம் கிடைக்காமல் பல தடவைகள் ஊசி போட்டாலும் சீர்கேடாகவே முடியும்.

காய்ச்சல் நோயாளியைப் படுக்கையிலிருத்தி ஆகாரம் வெறுத்து, சீரணக் கருவிகள் மறத்து. ஆயாசம், உள்குத்தலுடன் உடல் சாயும். உஷ்ணமானி ஏற்றத் தாழ்வுடன் 102 டிகிரிக்கு மேலும் கீழுமாக குறி காட்டும். மருத்துவர் அடிக்கடி கவனிக்க வேண்டிய நோயாகும் நவீன முறைப்படி ஆரஞ்சுப் பழமும் பாலும், செயற்கை பொடிப் பால் கரைசலும் கொடுத்தால் நோயை நீடிக்கச் செய்யும். நொய்க்கஞ்சி நீர்தான் கெடுதலற்ற ஆகாரமாகும். உடலைத் தாங்கி வந்து சிறுநீர் கழிக்க உதவி செய்யும். மற்ற ஆகாரங்கள் மந்தமுண்டாக்கும்.

காய்ச்சலில் பலரகமுண்டு விடாக் காய்ச்சல், விட்டு விட்டு ஏறி இறங்கும் காய்ச்சல். பகல் பூராவும் காய்ச்சலில்லாமல் இரவு பூராவும் பலமாகக் காய்ச்சலடித்து, மறுநாள் காலையில் காய்ச்சல் காணாதவர் போல் நடமாடித் திரியும்படி சுகங் காணும் காய்ச்சல். ஒன்றை விட்டு ஒரு நாள் காணும் காய்ச்சல் மூன்று முறைக் குளிர் காய்ச்சல். பித்தத்திலெழுந்த நாவரட்சி தாபக் காய்ச்சல், வாதக் காய்ச்சல், விஷ வாதக் காய்ச்சல், தொற்று நோயாக நாடெங்கும் பரவும் சுவாச விஷக் காய்ச்சல் (influenza) தவிர குளிர் காய்ச்சல், அதிசார காய்ச்சல், காங்கைலெழுந்த பழங் காய்ச்சல், பிரமேகக் காய்ச்சல், தொண்டைவாழையுடன் கூடிய சுக சன்னி, 21-நாள் விடாச் சன்னி ஆகியன. மிகுதியான 12 சன்னிக் கோளாறுகளாவன :—

1) அந்தகன்,	7) பிர்தட்டி
2) சீதாங்கன்,	8) தந்திரிகன்
3) கண்டகுச்சம்,	9) சித்தப்பிரமை
4) பொஊகேதரம்,	10) பிரலாபம்
5) அபினியாசம்,	11) கருதியாசம்
6) உருதர்தாகம்,	12) விகாருதம்

(Stethascope) நெஞ்சடி செவிக்குழாய்க் கருவியால் சுவாச எண்ணிக்கையும், (Therema metre) உஷ்ணமானியால், உஷ்ண மீறுதலும் கண்டறியலாம். ஆனால் நாடி நிதானத்தால் தான் மித மீறிய காய்ச்சலா, அல்லது வாத காய்ச்சலா என்று அறிய முடிந்து அதற்கான மாற்று மருந்தளிக்க நோய் குணம் காணும். கை நாடி பரீக்ஷையால் சைத்ய மிகுந்து மரண அறிகுறி கண்டாலும் அதற்கு வேண்டிய அருமருந்தொரு தனி மருந்துமளிக்கலாம். காய்ச்சலின் ரசமறியாமல் ஊசி மருந்தளிப்பதால் சடுதி மரணமும், பிழைத்தால் புலன் பொறிக் கேடும் விளைவிக்கும்.

காய்ச்சல் வரலாறு பூராவும் எடுத்தெழுதுவது நீண்டதொரு சுவடியாகு மாதலால், முறைக்காய்ச்சல் விஷயமான உடல்கோளாறு களும், நோய் தீர்க்கும் மருந்துகளும் இந்த சிற்றுரையில் எடுத்துக் கொள்வோம்.

இரவில் காணும் காய்ச்சலுக்கு :—

சுக்கு, மிளகு, திப்பிலி மூலம், விஷ்ணுகிரந்தி, பேய்ப்புடல், சிவன்வேம்பு, கிரும்பு, சிறுதேக்கு, மரமஞ்சள் வகைக்கு 15 கிராம் பொடித்து 50 கிராம் பனங்கல்கண்டும் 1 படி தண்ணீர் வார்த்துக் குடிநீர் காய்ச்சி காலை மாலை 6 பொழுது குடிக்கவும். நொய்க் கஞ்சி ஆகாரம் அருந்தவும்.

விட்டு விட்டு வரும் ஒரு நாள் விட்டு இரண்டு நாள் விட்டு மூன்று முறை குளிர் காய்ச்சலுக்கு :—

சீந்தில் தண்டு, சிறுதேக்கு, மரமஞ்சள், கிராம்பு, திரிகடுகு, கடுகுரோகிணி, திப்பிலி மூலம் வகைக்கு 15 கிராம் தட்டிப் போட்டு, 50 கிராம் பனங்கல்கண்டு போட்டு சரி பாதியாக வற்றிய குடிநீர் 7 அவுன்சு வீதம் காலை மாலை குடிக்கவும்.

காங்கையிலெழுந்த பழங் காய்ச்சலுக்கு :—

திரிகடுகு, சிவன்வேம்பு, விஷ்ணுகிரந்தி, பேய்ப்புடல், கிராம்பு ஆகியவைகளை முன்போல் குடிநீரிட்டு கால் கிராம் குங்கும கேசரி போட்டு முன் போல் அருந்தவும்.

கழிச்சலுடன் கூடிய விட்டு விட்டு வரும் அதிசார காய்ச்சல்:—

சுடுமிளகு, நருணைமூலம், வில்வப்பழம், வெப்பரிசி, சாதிக்காய் கிராம்பு, கசகசா ஆகியவைகளை முன் போல் குடிநீரிட்டு தேன் கால் அவுன்சு விட்டருந்தவும்.

வேளைக்கு நோய் கண்டு மருந்தளிக்கா விடிலும் பலவித சீரணிக்காத ஆகாரக் கெடுதலாலும் சைத்யம் மிகுந்து சன்னி யாகி அபாயக்குறி காணும். துணி மேல் துணிக் கம்பளம் போற்றினாலும் தாங்காத குளிர் நடுக்கமும். கை கால் குளிர்ந்து இரத்த ஓட்டம் தடைபடும். பேச்சு மூச்சு தடுமாறி மரணக் குறி காணுமுன்,

இஞ்சி தனிச்சாறு 5 அவுன்சு பிழிந்து, அடிநஞ்சி கரைந்து லிங்கக் கட்டும், ரசகற்பூரக் கட்டும் ஒவ்வொரு கிரும் விதம் உரைத்து கலக்கிக் கொடுக்க சுகம் காணும்.

மூலிகை ரட்சை

வாழ்க்கையில் ஏற்படும் பலவிதமான வேதனை, தீராப் பிணிகள், எதிரிகளின் தொல்லை, நவக்கிரகபீடைகளால் வறுமை, காரிய தாமதம், அமைதியின்மை, சந்ததி தடை, திருமணங்கள் தடை, வாழ்க்கையில் முன்னேற்றம் காண முடியாதபடி எதிரிகள் செய்யும் மாந்திரீகம், பில்லி, ஏவல், சூன்யம் போன்றவைகளால் தொல்லை, இத்தியாதி போன்ற தீய சக்திகளை ஒழித்துவிடுவது 'மூலிகை ரட்சை' ஒன்றே!

இவ்வகையில் பல்லாண்டுகளாக அரும்பாடு பட்டு ஆராய்ச்சி செய்து மூலிகைகளின் மூலங்களை திருமுருகன் உபாசனையால் சாபநிவர்த்தி செய்து, பிரத்தியேக பூசையில் வைத்து, தேவையுள்ள அன்பர்களுக்கு அனுப்பப்படுகிறது. இதன் பேரில் அன்பும், நம்பிக்கையும் உள்ளவர்கள் 25-காசு தபால் தலையு டன் எழுதினால் இதன் முழு விவரமும் தெரிவிக்கப்படும்.

மதுவின் கொடுமை பற்றிய ஆய்வுக் கட்டுரைத் தொடர் :— 1

மது + மனிதன் = மிருகம்!

“அறிவுடையவர், அறிவை அழிக்கும் கள்ளை உண்ணக் கூடாது. சான்றோரால் நன்கு மதிக்கப்படுவதை வேண்டாதவர் உண்ணலாம்.”

— திருக்குறள், துறவற இயல், கள் உண்ணாமை 923

முருகனிடம் முறையீடு!

தணிகை வேலவா! உன் திருவடித் தாமரையில் என் கண்ணீரை காணிக்கையாக்குகிறேன். 1971 ௵ ஆகஸ்டு 30-ஆம் நாளிலிருந்து உன்னிடம் தனிமையில், சிறியேன் ஒரு வேண்டுகோளினைக் கூறி வருகிறேன். எளியவனின் வேண்டுகோள் உன் திருச் செவிக்குக் கேட்கவில்லை போலும்! மது என்னும் அரக்கனின் வலையில் சிக்கி மதி மயங்கி, கதி கலங்கி, நிலை குலைந்து நிதியிழந்து, பகலில் மனித வாழ்வும், இரவில் மதுவுடன் சேர்ந்து மிருக வாழ்வுமாக, “இரட்டை வாழ்க்கை” வாழ்ந்து வரும் தமிழக மக்களின் அவல வாழ்வினை, மதுவின் ஆதிக்கத்திலிருந்து காப்பாற்றி நல்வாழ்வு அருள குன்றெல்லாம் வீற்றிருக்கும் குமரா! விரைந்து ஓடிவா! இதுவே என் வேண்டுகோள்.

கூறும் அடியவர்கள் வினை தீர்க்கும் குகனே! ஒருவேளை உன்னால் வரமுடியாமற் போனாலும் பரவாயில்லை! அன்னை பராசக்தி, சூரனை அடக்க, உனக்கு அளித்தாளே ஞானவேல்!, அந்த ஞானவேலினையாவது மது அரக்கனை தமிழகத்திலிருந்து விரட்ட அனுப்பிவை.

“உன்னைத் தொழுவதொன்றே என் வாழ்நாளில் இன்பம்” என்று ஆகஸ்டு 30-க்கு முன் உன்னை வழிபட்ட தூய்மையான அடியவர்கள் கூட 30-க்குப் பின் மதுவின் மயக்கத்தால், “ழேய்! முழுகந்தாண்டா என்னை குழிக்கச் ஷொன்னான்!” என்று உன்மீதே பழியைப் போடுகின்றார்கள்,

தமிழ்ப் பெருங்குடி மக்களின் தனிப்பெருந் தெய்வமே! உன் அடியவர்கள் இன்று, 'பெருங் குடியர்களாகி' மிருகமாகி வருவது உனக்குத் தெரிய வில்லையா!

தனிமையில் இத்தனை நாள் உன்னிடம் புலம்பிய புலம்பல்களை இனிமேல் "மூலிகை மணியின்" வழி தொடர்ந்து எழுதப்போகிறேன். கட்டுரைத் தொடரின் ஒரே நோக்கம், "மதுவின் அவலத்தினைப் பரப்பி, அதனை ஒழிப்பது" ஒன்றேயாகும். பலகாலும் உன்னி டம் சொல்லியும் என் வேண்டுகோள் நிறைவேறாத காரணத்தாலேயே, இந்தக் கட்டுரையை எழுதத் துவங்குகின்றேன்.

இறுதியாக ஒன்று! 'மது அரக்கனை' ஒழிக்க உனக்கு வர விருப்பமில்லையானால், ஒரே ஒரு உதவி மட்டும் எனக்குச் செய்! அன்னை பராசக்தியிடமிருந்து நீ பெற்ற ஞானவேலினை கடனாக எனக்குக் கொடு! அதன் உதவியுடன், மது அரக்கனை அடியோடு ஒழித்து விரைவில் உன்னிடம் திருப்பிக் கொடுக்கின்றேன்.

கருணை மறவா! கடன் தருவாயா?

— க. வேங்கடேசன்.

மதுவின் கொடுமை

ஆகஸ்டு 30, 1971க்குப் பிறகு, தேவலோகத்தில் ஒரு நாள் நிகழ்ச்சி

திருக் கயிலாயக் காட்சி:

வெள்ளி மலையின் பொன் மண்டபத்தில், சிவபெருமான், பொன்மேனிச் செம்மலாய் வீற்றிருக்க, மரகதப் பைங்கொடி போல் அம்பிகை அருகே அமர்ந்திருக்க, சித்தர், யோகியர், சிவகணங்கள், திருமால், பிரமன், முருகன், விநாயகர் ஆகியோர் கொலுவீற்றிருக் கின்றனர். எங்கும் பிரணவ ஒலி! மனதிற்கு அருளொலி தருகிறது. காலை நேரம்; இளந் தென்றல் வீச, அடியவர்களின் வாழ்த்தொலி யுடன் திருக்கயிலை தெய்வீகச் சோலையாகக் காட்சி அளிக்கிறது.

அப்போது, சிவபெருமான் திருமுகத்தில் ஒரு புன்னகை மின்னல் போல் தோன்றி மறைந்தது. உமையன்னை, "பெருமானே! தாங்களே புன்னகைத்துக் கொள்கின்றீர்களே, எந்த அடியாராவது அழைக்கின்றாரோ?" என்று கேட்கின்றாள்.

"மலையவன் மகளே! சிறிது காலமாக, இயமன் திருக்கயிலை வருவது இல்லை. அதற்குக் காரணமும் நான் அறிவேன். அவன் நிலை பரிதாபத்திற்குரியது. அதனை எண்ணியே புன்னகைத்தேன்" என்றார் சிவன்.

திருமாலும், பிரமனும் சேர்ந்து "ஆமாம்! அன்னையே, இயமன் சமீபகாலமாக பெரியதொரு சிக்கலில் வசமாக மாட்டிக் கொண்டு தவிக்கின்றார். காரணம், பூலோக மக்கள் தான். ஆகஸ்டு 30-க்குப் பிறகு, 'மது விலக்கு' எடுக்கப் பட்டதால், தமிழக மக்கள், மதுவின் மயக்கத்தால் மிருகமாகி, சொல்ல முடியாத கொடுமைகளைச் செய்தும் தம்மைத் தாமே அழித்துக் கொண்டு, மாள்கின்றனர். இதனால் இயமன் உலகம் நிறைந்து வழிகின்றது. இயமன், அவர்களை யெல்லாம் விசாரித்துத் தண்டனை வழங்குவதற்கு மிகவும் துன்பப்படுகின்றார். இந்த நிலை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. வேலை மிகுதியால், இயமனின் தூதர்கள், 'ஓவர்டைம்' 'போனஸ் உயர்வு' என்று அவர்கள் வேறு போராட்டம் செய்து வருகிறார்கள். இயம தர்பார் நிர்வாகம் சிக்கலாகியுள்ளது. இந்த நிலை நீடிப்பது பெரும் அபாயம். திரிசடைக் கடவுள் தான் இதற்கு ஒருவழி கூறவேண்டும்" என்றார்கள்.

இயமன் உலகத்தில் ஒரு காட்சி :

இயமன் அரசவை மண்டபத்தில், ஒரே கூச்சல்; குழப்பம். மதுவின் நெடி மூக்கை அறுக்கின்றது. கள்ளச் சாராயத்தால் மாண்டவர்களும், மதுவின் மயக்கத்தால் சண்டை போட்டு மாண்டவர்களும், இயமன் உலகம் நோக்கி வந்த வண்ணமிருக்கின்றனர். அப்போது, திடீரென்று 'பராக் — பராக்' என்று காவலர் குரல் கேட்டது. எல்லோரும் நுழைவாயிலை நோக்கினர். கொடுவாள் மீசையை மிடுக்குடன் முறுக்கியவாறு, தன் அருமையான எருமை மீது ஆரோகணித்து உள்ளே வந்தார் இயமன்.

தன் இருக்கையில் அமர்ந்து அவையை ஒரு கண்ணோட்டம் செலுத்தினார். கவலை ரேகைகள் முகத்தில் படர்ந்தன. அருகில் ஆழ்ந்த அக்கறையுடன் ஓலைச்சுவடியில் மூழ்கியிருந்த அமைச்சர் சித்ரபுத்திரரை அழைத்தார்.

" அமைச்சரே ! இன்றென்ன சேதி ? "

" அரசே ! நேற்று ஆந்திர மாநிலத்தில் கள்ளச் சாராயம் சாப்பிட்ட 60 பேர் இறந்து விட்டார்கள். ஒரே நாளில் இவ்வளவு சாவு, சாராயத்தால் இதுவரை ஏற்பட்டதில்லை. தமிழ் நாட்டில் ஆகஸ்டு 30-க்குப் பிறகு, மதுவால் மாள்பவர்களை கணக்கிட முடிய வில்லை. தண்டனை வழங்க வேண்டியவர்கள் எண்ணிக்கை வேறு அப்படியே உள்ளது. இந் நிலையில் எனக்கு ஒன்று தோன்றுகிறது. அமெரிக்காவில் 'கம்ப்யூட்டர்' என்ற கணக்கு போடும் கருவி ஒன்று செய்கிறார்களாம். கணக்கு வழக்குகளை விரைவில் பதிவு செய்யுமாம். அவற்றை வாங்கினால் நமக்கு சற்று வேலை குறையும்."

" அப்படியா ? நான் கைலாயம் சென்று வெகு நாளாகி விட்டது. இன்று போகிறேன் ! இது பற்றி சிவபெருமானிடம் கலந்து ஒரு முடிவுக்கு வருகிறேன் " என்று இயமன் கயிலை நோக்கிப் புறப்பட்டார்.

> நன்றாய்த் தூங்குங்கள் ! தசைநார்களின் களைப்பைப் போக்கி புதிய பலம் தரும் அருமருந்து — தூக்கமேயாகும். இதற்கு மதுவைத் தேடவேண்டாம். மதுவினால் உண்டாவது மயக்கம்; அது தூக்கமன்று ! இந்த மயக்கம் விளைவதற்குக்கூட நாளுக்கு நாள் குடியின் அளவை அதிகரிக்க வேண்டும்.
>
> — சர். மாரிஸ் கிரெக்.

திருக்கயிலையில் :

இயமனைப் பற்றி சிவபெருமான் உரையாடி முடிக்கும் போது, இயமன் உள்ளே நுழைகின்றார்.

" வரவேண்டும் இயம தேவரே ! தற்போது தான் உங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம் " என்று உமை அன்னை திருவாய் நிறைந்து வரவு கூறினாள்.

" அன்னையே ! தமிழ்நாட்டில் 'மதுவிலக்கு' எடுத்தாலும் எடுத்தார்கள். அதனால் விளையும் மரணத்தைப் பார்க்கும் போது, " நான் படும் பாடு பஞ்சுதான் படுமோ " என்று இராமலிங்க வள்ளலார் பாடியது போல் எனக்குப் புலம்பத் தோன்றுகிறது. தாங்கள் தான், ஐயனிடம் சொல்லி, இதனை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் ". அன்னை, ஐயனைப் பார்க்க, ஐயன்

"இந்திரா! உன் உலகத்திற்கு 20 ஆண்டுகட்கு முன்னர் 'காந்தியடிகள்' என்பவர் ஒருவர் வந்திருப்பாரே, அவரைப் பற்றி உனக்குத் தெரியுமா?" என்ருர்.

"பெருமானே! அவரைத் தெரியாமலென்ன? 'மகாத்மா' ஆயிற்றே அவர். அவர் தேவலோகம் வந்தபோதே, என்னிடத்து வந்து, "எனக்கு ஆடம்பர வாழ்வு பிடிக்காது! எனவே, ஒரு சிறு ஆசிரமம் போட்டுக் கொள்ள அனுமதி கொடுங்கள்" என்ருர். நான் தேவலோக சட்டப்படி அது நடக்க இயலாது என்றேன். உடனே அவர், சட்ட மறுப்பு இயக்கம் நடத்தி, உண்ணுவிரதம் இருந்து, தற்போது, தனி ஆசிரமம் கட்டிக் கொண்டு அமைதியாக, "இரகுபதி இராகவ இராசாராம், பதீத பாவன சீதாராம், ஈச்வர அல்லா தேரா நாம்" என்று பக்திப் பனுவல் பாடி வருகின்ருர்" என்று காந்தியைப் பற்றி ஒரு அறிக்கையையே விட்டார் இந்திரன்.

"இந்திரா! அவரை உடனே இங்கு அழைத்து வருவாயாக" என்று ஆணையிட்டார் இந்திரன், காந்தியடிகளை அழைத்து வர இந்திர உலகம் சென்ருர்.

நம்மிடையே மது அருந்துவோர் பல்லாயிரக் கணக்கில் வாழ்வதை விட, இந்தியா தரித்திர நிலையை அடைவதையே நான் விரும்புவேன். இங்கு மதுவைத் தடுக்க கல்வித் திட்டங்களையே கைவிட வேண்டி வந்தாலும் அவ்வாறு செய்யத் தயங்கவே மாட்டேன் ... ...

— காந்தியடிகள்

இந்திர உலகத்தில் ஒரு காட்சி:

இந்திர உலகில் ஆரவாரமில்லா அமைதியான ஒரு இடம். இயற்கையின் வளமான இனிய சூழலில், சிறு ஆசிரமம் ஒன்று காணப்படுகிறது. அதன் முன்னுல், மூவர் உட்கார்ந்துக் கொண்டு உரையாடிக் கொண்டுள்ளனர். மூவர் முகங்களிலும் சோகம் கப்பிக் கொண்டிருக்கிறது.

மூவரில் மூத்தவர் தான் காந்தியடிகள். இரண்டாமவர், இராசாசி, தேவலோகத்துக்கு அண்மையில் வந்தவர் மூன்ருவது அடக்கமாக, கண்களில் நீர் சோர, தலை குனிந்துக் கொண்டுள்ளார்.

அவர் தான் அறிஞர் அண்ணா அண்மையில் தேவலோகம் வந்த இராசாசி, தமிழ் நாட்டில் மதுவின் கொடுமை நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறினார். அதைக் கேட்டுத்தான் அறிஞர் அண்ணா அழுதார்.

“மிஸ்டர் அண்ணாத்துரை! அழாதீர்கள். நாம் கடந்த 25 ஆண்டுகளாக, மதுவிலக்கை காப்பாற்றி வந்த போது, மக்கள் இவ்வளவு துன்பப்பட வில்லை. எனக்கென்ன ஒரு வருத்தம் என்றால் தமிழ் நாட்டில் கூட ‘மதுவிலக்கை’ கைவிட்டு விட்டார்களே! என்பது தான். எல்லாம் ஈசன் செயல்” என்று மகாத்மா பெருமூச்சு விட்டார்.

மது பானத்தினால் களைப்பு நீங்குமென்பது முற்றும் தவறான எண்ணம். மது களைப்பைப் போக்குவதில்லை. கொஞ்சநேரம் களைப்பு தோன்றாமல் செய்கிறது. வலியின் காரணத்தை நீக்குவதில்லை. சிறிது நேரத்திற்கு வலி தெரியாமல் செய்கிறது.

— டாக்டர் கோர்ட்னி வீக்ஸ்

அப்போது, இந்திரன் அனுப்பிய தூதர் வந்து, காந்தியடிகளை சிவபெருமான் அழைத்ததாகக் கூறினான். அடிகள், திருக்கயிலாயம் சென்று சிவனை வணங்கி, அழைத்த காரணம் கேட்டார்.

சிவபெருமான்,

“அண்ணலே! தாங்கள் இந்திர உலகம் வந்து 20 ஆண்டுகளாகிறது போதிய ஓய்வு பெற்றிருப்பீர்கள். தற்போது இயமனுக்கு உங்கள் நாட்டு மக்களால், ஒரு பெரிய சிக்கலே வந்துள்ளது. அதனைத் தாங்கள் தாம் தீர்த்து வைக்க வேண்டும். உடனடியாக, தாங்கள், தங்களின் துணைவர்களுடன் தமிழகம் சென்று, ‘மது விலக்கால்’ ஏற்பட்ட கொடுமைப் பற்றி ஆய்வு செய்து, அதனை நீக்கி, அதன் மூலம் இயமனுக்கு உண்டான சிக்கலைத் தீர்த்து வைப்பீராக” என்று கூறினார்.

அண்ணல் மிகுந்த அவநம்பிக்கையுடன்,

“பெருமானே! என்னால் அது முடியக்கூடிய செயலாகத் தோன்றவில்லை. அண்மையில் என் நண்பர் இராசாசி, என் நாட்டில்

இருந்து வந்தவர். அவர், மதுவிலக்கின் கொடுமையான காட்சிகளை விவரிக்கும் போது, என் உடலும் உள்ளமும் நடுங்குகிறது என் நாட்டு மக்கள் 'மதுவென்னும்' படுபாதாளம் நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றார்கள். அவர்களைத் தாங்கள் தான் காப்பாற்ற வேண்டுமே யொழிய, எங்களால் முடியாது" என்றார்.

சிவபெருமான், "அடிகளே! கவலைப்படாதீர்கள். எதற்கும் ஒரு முறை உங்கள் நாட்டிற்குச் சென்று நிலைமையை நேரில் கண்டு வாருங்கள்" என்றார்.

"தங்களின் சித்தம் என் பாக்கியம்" என்று காந்தி பதில் கூறி, இந்திரலோகம் வந்தார். அறிஞர் அண்ணாவிடமும், இராசாசியிடமும் நடந்ததைக் கூறி, அவர்களையும் தமிழகம் காண அழைத்தார்.

"என்னை மன்னியுங்கள் அண்ணலே! ஆகஸ்டு 31-க்குப் பிறகு, தமிழகத்தைப் பற்றிய என் எதிர்காலக் கனவுகள், ஊமை கண்ட கனவாகிப் போனது. இராசாசி அவர்கள் தற்போது கூறிய செய்திகள், நான் புற்று நோயால் பாதிக்கப்பட்ட போது அடைந்த வேதனையைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிமாக்கியது 'மது விலக்கினை' என் அருமைத் தம்பிகள் கைவிடுவார்கள் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. 'மதுவுடன் வாழும் தமிழகத்தினை' நான் காண விரும்பவில்லை. நீங்களாவது சென்று, உங்கள் பணியால் மது தமிழகத்தை விட்டு ஒழியட்டும், பிறகு வருகிறேன்" என்று நெஞ்சுருக, வேதனையுடன் பதில் கூறினார் அறிஞர் அண்ணா

காந்தியடிகள் இராசாசியைப் பார்த்து, "What about you Mr. Rajaji? Are you willing to follow me?" என்றார்.

இராசாசி புன்னகையுடன், "No, Mr. Gandhiji, just now I came from Tamilnadu. So, let me take some rest in Heaven" என்று பதில் கூறினார்.

காந்தியடிகள் வழக்கமான கைத்தடியுடனும், கூல்ணியுடனும், நெஞ்சிலே வேதனையுடன், தமிழகம் நோக்கி 'கால் நடையாகவே' இந்திர லோகத்திலிருந்து கிளம்பினார். (தொடரும்)

மூலிகை மணி சந்தா விபரம்: தனி இதழ் ரூ. 0—50

ஆண்டு சந்தா 6—00

மூவாண்டு சந்தா ரூ. 18—00 ஆயுள் சந்தா 150—00

மூவாண்டு சந்தா ஒரே தடவையில் செலுத்துபவர்களுக்கு எமது வெளியீடுகளில் ஏதேனுமொன்று இலவசமாகத் தரப்படும். ஆயுள் சந்தா செலுத்தினால், எமது வெளியீடுகள் அனைத்தும் அன்பளிப்பாகத் தரப்படும்.

செய்தி :-

அமைச்சரின்
★ அழகான அறிவிப்புகள்

தமிழக அரசின் பட்ஜெட்டில் இவ்வாண்டு சித்த மருத்துவம், தனி இடம் பெற்றுள்ளமை போற்றுதற்குரியது. வழக்கமாக, சித்த மருத்துவம் பற்றி - சட்ட மன்றத்தில், 'காமா சோமா' என்று பேசும் அங்கத்தினர்கள், இவ்வாண்டு ஆக்கபூர்வமாக சில திட்டங்களைக் கூறியுள்ளனர். 'சித்த மருத்துவம்' சீர் பெற்று வருவதற்கு நல்லதொரு அறிகுறியே.

இவற்றிற்கெல்லாம் சிகரமாக, அண்மையில் அறிஞர் அண்ணா மருத்துவ மனையில், "சித்த மருந்து உற்பத்திசாலை" கட்டிட அடிக்கல்நாட்டு விழாவில் கலந்துக் கொண்ட அமைச்சர் அன்பழகர், அழகான சில அறிவிப்புக்களை அடுக்கடுக்காகக் கூறினார்.

(1) இவ்வாண்டுக்குள், 10 தாலுக்காக்களின் தலைநகர் மருத்துவ மனையில் சித்த மருத்துவப் பிரிவுகள் துவக்கப்படும்.

(2) சென்னையில்,

சைதாப்பேட்டையில் ஒரு சித்த மருத்துவ மனையும்

மாநில நலத்துறை இயக்குனர் அலுவலகத்தில் ஒரு சித்த மருத்துவ மனையும்,

திருவல்லிக்கேணி கோஷா மருத்துவ மனையில் ஒரு சித்த மருத்துவப் பிரிவும்,

ஆக, சென்னையில் மட்டும் மேலும் மூன்று சித்த மருத்துவ மனைப் பிரிவுகள் துவக்கப்படும்.

(3) 'மூலிகைப் பண்ணை' யைச் சுற்றி சுவர் எழுப்புதல்,

என்று மேற்கண்ட மூன்று அறிவிப்புகளைக் கூறினார்.

'சித்த மருத்துவம்' இந்த அளவுக்காவது தி. மு. க. அரசினால் வளர்க்கப்படுவது குறித்து மகிழ்ச்சி அடைவதுடன், இந்த திட்டங்களை ஆர்வமுடன் வகுத்து, உடன் நிறைவேற்ற ஆழ்ந்த கவனம் செலுத்தும் மருத்துவத்துறை அதிகாரிகட்கு எமது நல்வாழ்த்துக்கள்.

அமைச்சர் அன்பழகர், இத் துறையில் அமைச்சராக இல்லாது இருப்பின் இந் நற்பணிகள் இவ்வளவு விரைவாக நடப்பது மிகவும் சந்தேகமே! அவரின் விரைவான பணிகளை பாராட்டி, மேலும் இம் மாதிரியான அறிவிப்புகளை அடிக்கடி அறிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம். ●

உ

மூலிகை மணி

மருத்துவர் ஆ. இரா. கண்ணப்பர் அவர்களை

சனி, ஞாயிறு தவிர மற்ற நாட்களில்

23, கிளப் ரோடு - கிழக்கு,

ஷெனாய் நகர்,

சென்னை - 30. போன் : 666249

முகவரியில் நேரில் சந்தித்து

மருத்துவ ஆலோசனையும், மருந்தும் பெறலாம்.

ஆலோசனை கட்டணம் உண்டு.

நோயாளிகள் எமது ஆலோசனையும், மருத்துவச் சிகிச்சையும் பெற விரும்பினால், மேல்கண்ட விவரப்படி சென்னை, அல்லது வேலூருக்கு குறித்த நாட்களில் வந்து ஆலோசனையும், கைநாடி, உடல்நிலை கண்டு முறைப்படி சிகிச்சை பெறலாம்.

நேரில் வர வசதியற்றவர்கள் எங்கள் நூல்களில் எழுதி இருக்கும் சிகிச்சை முறைகளைப் படித்து, இலகு முறையில் செய்து குணம் காணலாம். கடித மூலமாக சிகிச்சையோ, ஆலோசனையோ பெறுவது பயன் தராது. சந்தேகங்களுக்கு விளக்கம் கேட்போர் ரிப்ளை கார்டு அல்லது தபால் தலை வைத்த கவர் அனுப்பவேண்டும்.

மூலிகை மணி வெளியீடுகள், மருந்துகள்-சென்னை, வேலூர் ஆகிய இரு இடங்களிலும் கிடைக்கும்.

எமது வெளியீடுகள் :

நம் நாட்டு மூலிகைகள்	1-ம் பாகம் ரூ.	3	00
நம் நாட்டு மூலிகைகள்	2-ம் பாகம்	3	00
நம் நாட்டு மூலிகைகள்	3-ம் பாகம்	3	00
நம் நாட்டு மூலிகைகள்	4-ம் பாகம்	3	00
நம் நாட்டு மூலிகைகள்	5-ம் பாகம்	3	00
நம் நாட்டு மூலிகைகள்	6-ம் பாகம்	3	00
நோயும் மருந்தும்	1-2 பாகம்	3	00
நோயும் மருந்தும்	3-4 பாகம்	2	00
விஷ ஜந்துக்களும் மூலிகைகளும்		3	00
புகழ் பெற்ற மூலிகைகள்		0	60
மனித உறுப்புக்களில் மூலிகைகளின் குணாதிசயங்கள்		0	60
பயன் தரும் பத்துக் கீரைகள்		0	60
சக்தி தரும் சஞ்சீவி மூலிகைகள்		0	60
குழந்தை பிணிகளும் மூலிகை மருத்துவமும்		0	60

ஒரு புத்தகத்திற்கு தபால் சிலவு 0-25 சேர்த்து அனுப்பவும்.

மொத்த புத்தகமும் தபாலில் பெற

புத்தக விலையுடன் ரூ. 2—75 சேர்த்து கீழ்க்கண்ட முகவரிக்கு மணியாடர் அனுப்பி பெறலாம்.

முகவரி : ஆ. இரா. கண்ணப்பர்,

மூலிகை மணி அலுவலகம்

59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1 (வ. ஆ.)

Printed at Mooligai Mani (P) Press; Vellore N. A.
Printer, Editor & Publisher Dr. A. R. Kannappar, R. M. P.
59, Masilamani Mudali Street, Vellore, N. A.